# கோபுரம்



தகவல் இதழ்

ஆடி, 1992

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொழி மாநாடு



மொழிமாநாட்டைத் தொடக்கிவைக்க வருகைதந்த மேதகு ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்களை, கௌரவ அமைச்சர்கள், செள. தொண்டமான், வி. ஜே. மு. லொகு பண்டார, பி. பி. தேவராஜ், கொழும்பு மாநகர பிரதி முதல்வர், எஸ். கணேசலிங்கம் ஆகியோர் அழைத்துவருங் காட்சி.



மேதகு ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்களுக்கு, இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்ததோடு சாகித்திய விழா நினைவுச் சின்னத்தையும் வழங்கிச் சிறப்புச் செய்தார்.

---

அட்டைப்படம் :–

சூரியனின் வடிவத்தைக் காட்டும் 13ம் நூற்றாண்டுச் சிற்பம். லண்டன் விக்டோரியா – அல்பேர்ட் தொல்பொருட்காட்சிச் சாலையில் காணப்படுகின்றது.

( இண்டியன் மைதோலோஜி எனும் நூலிலிருந்து )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபுரம்

இந்து சமய, கலாசார திணைக்கள வெளியீடு

மலர் : 3 ★ ஆங்கிரச வருடம், ஆடி மாதம் 1992 ★ இதழ் : 2—3


## எண்ணம்

கடந்த மேமாதம் நடைபெற்ற இரண்டாவது தேசிய சாகித்திய விழா, எமது நாட்டின் இலக்கியச் செழுமையின் சிறப்புக்கூறும் விழாவாக அமைந்தது. மேதகு ஜனாதிபதி அவர்கள் மொழியியல் மாநாட்டைத் தொடக்கி வைத்ததும், மாண்புமிகு பிரதமர் அவர்கள், பரிசில்பெற்றோருக்கு விருதுகளை வழங்கி கௌரவித்ததும் விழாவின் மேன்மைக்குப் பெருமையும் பொலிவும் சேர்த்தன.

தொடர்ந்து அறநெறிப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும் பாடத்திட்டம், இலவச நூல்வெளியீடு என்பன அறிமுகமும் ஜூலை மாதத்தில் இடம்பெற்றன. ''ஆலயங்கள்தோறும் அறநெறிப் பாடசாலைகள்'' நிகழவேண்டும் என்ற பிரகடனத்தை ஆலய அறங்காவலர்களும், நிர்வாகிகளும் ஏற்றுக்கொண்டு செயற்பட முன்வந்துள்ளனர்.

இவ்விதழில், இவைபற்றிய செய்திகளோடு, திணைக்களத்தின் பல்வேறு செயற்பாடுகள் பற்றிய தகவல்களும் இடம்பெற்றுள்ளன. இந்த இதழில் இருந்து ''வாழ்வியல் சிந்தனை'' என்ற ஒரு புதிய தொடர் ஆரம்பமாகின்றது. சுவாமி ஆத்மகனாநந்தா அவர்கள் முதலாவது கட்டுரையை எழுதியுள்ளார்.

இவ்வருட இறுதிக்குள் ''பக்தித் தமிழ் விழா'', ''நாடக விழா'' ஆகிய மேலும் இரண்டு விழாக்களை எதிர்கொள்கின்றோம். இவைபற்றிய செய்திகள் எமது அடுத்த கோபுரம் இதழில் இடம்பெறும்.

---

★ கோபுரம் இதழ் பற்றிய உங்கள் கருத்துகளை எமக்கு எழுதி அனுப்புங்கள்.


முகவரி:— **பணிப்பாளர்,**

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,<br>
''காப்புறுதி இல்லம்'' 9ம் மாடி,<br>
21, வொக்ஷோல் வீதி, கொழும்பு–02.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சாகித்திய விழா - 1992

தலைநகரில் கடந்த மேமாதம் நடுப் பகுதியில் நடைபெற்ற இரண்டாவது தேசிய தமிழ் சாகித்திய விழா இலங்கை தமிழ் இலக்கிய உலகின் ஒரு திருப்பமாக அமைந்தது என்பதைத் துணிந்து கூற லாம். விழாவிற்கு முன்பு நடைபெற்றமுன் னோடி நிகழ்ச்சிகளும், மொழிமாநாடு, கலாசார ஊர்வலம், கலைநிகழ்ச்சிகள், இளையோர் முத்தமிழ் அரங்கம், மங்க லப்பெருவிழாவாக அமைந்த இறுதிநாள் விருதுவழங்கல், கலைநிகழ்ச்சிகள் அனைத் துமே, தலைநகரில் மட்டுமன்றி இலங்கை வாழ் தமிழ்மக்கள் அனைவரிடமுமே புதிய சிந்தனைகளை ஏற்படுத்தின என்றே கூற வேண்டும். அத்துடன் நாட்டின் பல பாகத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள், கலைஞர்கள், மாணவர்கள் கலந்து கொண்டமை விழாவினை தேசியத் தன்மை மிக்கதாகியது.

### சாகித்திய விழா முன்னோடி நிகழ்ச்சிகள்

சாகித்திய விழாவிற்குமுன்னோடியாக வும், இலக்கிய ஆர்வலர்கள், எழுத்தா ளர்கள், இளைஞர்கள் மத்தியில் இலக்கி யச் சிந்தனையை ஏற்படுத்தும் நோக்கத் தோடும் பல நிகழ்ச்சிகள் நடாத்தப்பட் டன.

### பட்டிமன்றம்

பெண்கள் மட்டுமே நடாத்திய பட்டி மன்றம் ஒன்று ஏப்பிரல் மாதம் 4ம் திகதி காலை திணைக்களக் கேட்போர் கூடத் தில் நடைபெற்றது. "பண்டைத் தமிழ் இலக்கியங்கள் ஆண்களின் மேலாதிக் கத்தை வலியுறுத்துகின்றன' எனும் தலைப் பிலான இப்பட்டிமன்றத்திற்கு கண்டி நல்லாயன் கல்லூரி ஆசிரியை திருமதி லலிதா நடராஜா தலைமை தாங்கினார். திருமதி செல்வி திருச்சந்திரன், திருமதிஎன். வேதநாயகம், செல்வி நளாயினி கணப திப்பிள்ளை ஆகியோர் இக்கருத்தை ஆத ரித்துப் பேசினர். திருமதி சாந்தி சச்சிதா னந்தன், திருமதி சாந்தி நாவுக்கரசன், திருமதி அன்னலட்சுமி இராஜதுரை ஆகி யோர் இக்கருத்தை மறுத்து வாதிட்ட னர்.

### சூடாமணி சடகோபன் சொற்பொழிவுகள்

தஞ்சாவூரைச் சேர்ந்த சங்கீத உபந் நியாசகரான திருமதி சூடாமணி சட கோபனின் இசையுடன் கலந்த இலக்கியச் சொற்பொழிவுகள் நான்கு முறையே ஏப் ரல் மாதம் 21, 22, 23, 24ம் திகதிகளில் இடம் பெற்றன. 'ஒட்டக் கூத்தரின் கவி நயம்', 'தமிழ்ப் புலவர்களின் கவிநயம்', 'பெரியாழ்வார் திருமொழி', 'ஆண்

### ஆத்மலயம்

ஆத்மாக்கள் ஆத்மலயம் பெறுவ தற்கு உரிய இடமே ஆலயமாகும்.

தற்காலத்தில் அமைதியைக் கருதி தொழிற்சாலைகளில் பொருத் தும் இயந்திரங்கள் கூட சப்தமில் லாமல் இயங்கும் வகையில் செய்யப் பட்டு வருகின்றன. அங்ஙனமிருக்க ஆத்ம சாந்திக்கும், அமைதிக்கும் வந்த ஆலயங்களில் இன்று நடப் பவை என்ன? சித்தத்தைக் கலக்கி காதைச் செவிடாக்கும் அசுர ஒலிக ளால் அமைதி குலைக்கப்படுகின்றது.

—சுவாமி கங்காதரானந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காலி வீதி வழியே இடம்பெற்ற கலாசார ஊர்வலத்தில்
பழந்தமிழ்ப் புலவர் வருகையும் காவடி நடனமும்.

டாள் சொல்நயம்' ஆகிய தலைப்புக்களில் திருமதி சடகோபன் உரையாற்றினார்.

## தமிழ்நாவல் பற்றிய கருத்தரங்கு

விழா முன்னோடி நிகழ்வாக, முப்பதாண்டுகால தமிழ் நாவல்கள் பற்றிய கருத்தரங்கொன்று புத்தகக் கழக ஆதரவில் ஏப்ரல் மாதம் 26ம் திகதி திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இக்கருத்தரங்கினை திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் நெறிப்படுத்தினார். சுந்தர ராமசாமியின் 'ஒரு புளியமரத்தின் கதை' ஆ. மாதவனின் 'புனலும் மணலும்', தி. ஜானகிராமனின் 'மரப்பசு', தோப்பில் மீரானின் 'ஒரு கடலோரக் கிராமத்தின் கதை' ஜெயகாந்தனின் சிலநேரங்களில் சில மனிதர்கள்' ஜானகிஇராமனின் 'அம்மா வந்தாள்' ஆகிய நாவல்கள்பற்றிமுறையே திரு.செ. யோகராஜா, ஜனாப் ஜவாத் மரைக்கார், திரு. உமா வரதராஜன், கலாநிதி எம். ஏ. நுஃமான், திரு. சு. முரளீதரன், திரு. தெளிவத்தை ஜோசப் ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர். மனதைக் கவர்ந்த இலங்கை நாவல்கள் பற்றி திரு. அந்தனி ஜீவா பேசினார். கலாநிதி கா. சிவத்தம்பி, கலாநிதி எம். ஏ. நுஃமான் திரு. சண்முகலிங்கம், ஜனாப் மானா மக்கீன் ஆகியோரும் நாவல்கள் பற்றிய கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர்.

## 'தமிழில் மகளிர் இலக்கியம்' 'படைப்பும் ஆளுமையும்' - கருத்தரங்குகள்

இரண்டு கருத்தரங்கு அமர்வுகள் மே மாதம் 6ம் திகதி காலையிலும் மாலையிலும், திணைக்களக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன.

'தமிழில் மகளிர் இலக்கியம்' என்ற தலைப்பில் காலையில் நடைபெற்ற அமர்வில் திருமதி செல்வி திருச்சந்திரன், வள்ளி கணபதிப்பிள்ளை, திருமதி யோகா பாலச்சந்திரன், திருமதி லலிதா நடராசா, நளாயினி கணபதிப்பிள்ளை, திருமதி அருந்ததி சபாநாதன், திருமதி சாந்தி சச்சிதானந்தன், திருமதி என். வேதநாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம், கார்த்தியாயினி நடராஜா ஆகியோர் கலந்துகொண்டு மகளிர் இலக்கியம்பற்றிப் பேசினர்.

பிற்பகல் அமர்வு பேராசிரியர் எஸ். தில்லைநாதன் தலைமையில் 'படைப்பும் ஆளுமையும்' எனும் பொருளில் இடம் பெற்றது. பிரபல எழுத்தாளர்களான சுபைர் இளங்கீரன், உ. சேரன், திருமதி பாலேஸ்வரி நல்லரெட்னசிங்கன் ஆகியோர் தமது எழுத்து அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர். அன்று, வீரகேசரி இந்துகலாசார அமைச்சுடன் இணைந்து நடத்திய புத்தாண்டு கட்டுரைப் போட்டியில் பரிசுபெற்றோருக்கான பரிசளிப்பு வைபவமும் இடம்பெற்றது.

## ஆன்மீகத் தெளிவு

★ ஆன்மீகம் என்பதன் உண்மையான விளக்கம் என்ன?

★ ஆன்மீகம் ஆன்மாவுடன் சம்பந்தப்பட்டது. உடலுக்கு உயிராக இருக்கும் ஆத்மா மோட்சம் பெற உபதேசிக்கும் வழியே ஆன்மீகம் எனப்படும். பதவி, பணம் படைத்தவனும் இறுதியில் ஆன்மீகத்திலேயே நாட்டம் கொள்கிறான்.

உயிருடன் உலாவும் நாம் உடலுக்கு வேண்டிய சுகத்தைத் தேடியலைகிறோம். உள்ளேயிருக்கும் ஆத்மாவைப் பற்றிச் சிந்திப்பது இல்லை. வாழ்நாளில் புண்ணியச் செயல்கள் செய்தால்தான் பகவானிடம் செல்லலாம். அடுத்த பிறவியிலும் நல்ல மனிதனாகப் பிறக்கலாம்.

உதாரணமாகக் கதையுடன் கூறின்—ஒரு வைத்தியரிடம் சென்று வயிற்று வலிக்கு மருந்து கேட்டால் அவர் உள்மருந்து தருகிறார். அதே வேளை காலின் வெளிப்புறத்தில் ஏற்பட்ட காயத்திற்குப் பூச வெளிமருந்து தருகிறார். இவ்விரண்டினையும் நாம் மாறிப் பாவிக்க முடியாது. அதே போன்றுதான் உடலுக்கு சுகம் தேடும் நாம் உள்ளேயிருக்கும் ஆத்மாவிற்காக புண்ணியச் செயல்கள் செய்தல் வேண்டும்.

—சூடாமணி சடகோபன்

## மொழியியல் மாநாடு

மே மாதம் 7ம் திகதி காலை மன்றக் கல்லூரியில் பிராந்திய மொழியியல் மாநாட்டுடன் 92ம் ஆண்டுக்கான தமிழ் சாகித்திய விழா சம்பிரதாய பூர்வமாக ஆரம்பமானது. இலங்கைக் குடியரசின் மேதகு ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு, விழாவைத் தொடக்கிவைத்தார். சுற்றுலாத்துறை அமைச்சர் கௌரவ எஸ். தொண்டமான், கலாசார தகவற் துறை அமைச்சர். டபிள்யூ. ஜே. எம். லொக்குபண்டார ஆகியோர் சிறப்புவிருந்தினராக கலந்துகொண்டனர். இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் தொடக்க விழாவுக்குத் தலைமை வகித்தார். இந்திய மொழியியற் துறைப் பேராசிரியர் டாக்டர் இ. அண்ணாமலை 'மொழி, தொடர் பாடல், நவீனத்துவம்' என்ற தலைப்பில் முதலாவது கட்டுரையைச் சமர்ப்பித்தார்.

மொழியியல் மாநாட்டு அமர்வுகள், 7ம்,8ம்,9ம் திகதிகளில் காலையிலும்மாலையிலும்இடம்பெற்றன. இலங்கை,இந்தியா, சிங்கப்பூர், மலேஷிய அறிஞர்கள் ஆய்வுரைகள் சமர்ப்பித்தனர்.

தொடக்கவிழாவிற்கு பல அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிற நாட்டுத் தூதுவர்கள், பிரமுகர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தனர்.

## கலாசார ஊர்வலம்

கொழும்பு மாவட்ட தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் தமிழுணர்வோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்திய கலாசார ஊர்வலம் மே 7ம் திகதி பிற்பகல் பம்பலப்பிட்டி பழைய கதிரேசன் ஆலய முன்றலில் நாதஸ்வர மேளவாத்தியங்களுடன் ஆரம்பமாகி வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில்முடிவடைந்தது.பழந்தமிழ்ப்புலவர்கள், யானைகள் சகிதம், பழந்தமிழ் நூல்களின் பதாகைகள், காவடி, கோலாட்டம், கும்மி, நடனங்கள் என தமிழ் மாணவர்கள் ஊர்வலத்தை வெகு சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், திருமதி விஜயலட்சுமி தேவராஜ், அமைச்சின் செயலாளர் திரு. கா. தயாபரன், அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் திருமதி கீதா நித்தியானந்தன் ஆகியோர் ஊர்வலத்திற்கு தலைமையேற்று நடந்தனர். காலி வீதியில் மூன்று மணிநேரம் நடைபெற்ற இவ்வூர்வலம் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தது.

## நூல் கண்காட்சி

விழாவை ஒட்டியதாக இராமகிருஷ்ண மிஷன் சிறிய மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தமிழ்நூல்கள் கண்காட்சியை 7ம் திகதி மாலை, கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி இராஜ்மனோகரி புலேந்திரன் திறந்து வைத்தார்.

இக் கண்காட்சியில் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் கொணரப்பட்ட ஈழத்துத் தமிழ்நூல்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. சஞ்சிகைகள், நாவல்கள், சிறுகதைகள், ஆய்வு நூல்கள், சிறுவர் இலக்கியம் என பல்வேறு வகுதிகளில் நூல்கள் வகுக்கப்பட்டிருந்தன. திருகோணமலை,மட்டக்களப்பு மலையகப்பகுதிகளைச் சார்ந்த அரிய பல நூல்களும் இடம் பெற்றிருந்தன. தற்போது கனடாவில் வாழும் பூராடனார் என்ற இலங்கை எழுத்தாளரின் மின்கணணி மூலம், அச்சுருப் பெற்ற நூல்கள் அனைவரையும் கவர்ந்தன.

தொடர்ந்து மூன்று நாட்கள் ஆயிரக் கணக்கான மாணவர்கள், எழுத்தாளர்கள், பிரமுகர்களால் பார்வையிடப்பட்ட இந்நூல் கண்காட்சி பலத்தவரவேற்பைப் பெற்றது. நூற் கண்காட்சியுடன் இணைந்ததாக இந்திய, இலங்கை தமிழ் நூல்கள் விற்பனையும் இடம் பெற்றது;

## விழாமலர் வெளியீடு

சாகித்திய விழாவை ஒட்டி வெளியிடப்பட்ட சிறப்புமலரை கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி இராஜ்மனோகரிபுலேந்திரன் 7ம் திகதி மாலை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் வெளியிட்டுவைத்தார். சிறப்பு மலர்ப் பிரதிகள், மொழியியல் மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த அறிஞர்களுக்கும், பிரமுகர்களுக்கும், இராஜாங்க அமைச்சர்கள், திருமதி புலேந்திரன், திரு. பி. பி. தேவராஜ் ஆகியோரால் வழங்கப்பட்டன.



**கலைநிகழ்ச்சிகளில் கிராமிய நடனம் வழங்கிய திருகோணமலை சண்முக வித்தியாலய மாணவியரின் தோற்றம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளையோர் முத்தமிழ் அரங்கு

கொழும்பு மாவட்ட தமிழ்ப் பாடசாலைகள் இணைந்து சாகித்திய விழாவில் முழுமையாகப் பங்கேற்றன. தொடக்கநாளன்று இலங்கை மன்றக் கல்லூரி மருங்கே உள்ள பாதையில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் ஜனாதிபதியை தமிழ்க் கலை மணம் கமழ வரவேற்றனர். அன்று பிற்பகல் கலாசார ஊர்வலம் இடம்பெற்றது.

மே மாதம் 9ம், 10ம் திகதிகளில் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன்

## மொழியியல் மாநாட்டிற் கலந்துகொண்டு கட்டுரை படித்த வெளிநாட்டு உள்நாட்டு அறிஞர்கள்

1. கலாநிதி இ. அண்ணாமலை
   இயக்குனர், இந்திய மொழிகள் நடுவன் நிறுவனம், மைசூர், இந்தியா.
2. கலாநிதி கி. அரங்கன்
   தலைவர் மொழியியல்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம். தஞ்சாவூர், இந்தியா.
3. பேராசிரியர் இராமசுந்தரம்
   தலைவர் அறிவியல் தமிழ்த்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், இந்தியா.
4. கலாநிதி எல். இராமமூர்த்தி
   புதுவை மொழியியல் பண்பாட்டு நிறுவனம், பாண்டிச்சேரி, இந்தியா.
5. பேராசிரியர் கி. கருணாகரன்
   தலைவர், மொழியியல்துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், இந்தியா.
6. திருமதி இ. கைலைநாதன்
   மொழியியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், இலங்கை.
7. பேராசிரியர் செ. வை. சண்முகம்
   மொழியியல்துறை, அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், இந்தியா.
8. திருமதி சுபதினி ரமேஷ்
   மொழியியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
9. கலாநிதி சுப. திண்ணப்பன்
   தலைவர், தமிழ்த்துறை, தேசியகல்வி நிறுவனம், சிங்கப்பூர்.
10. பேராசிரியர் சி. தில்லைநாதன்
    தலைவர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை, இலங்கை.
11. கலாநிதி திருமதி க. திலகவதி
    இந்திய ஆய்வியல்துறை, மலேயாப் பல்கலைக்கழகம், கோலாலம்பூர், மலேசியா.
12. கலாநிதி எம். ஏ. நுஃமான்
    தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை, இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புத்தகக் கண்காட்சியை சுற்றுலாத்துறை அமைச்சர் மாண்புமிகு செள. தொண்டமான் அவர்களும் இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்களும் பார்வையிட்டபோது.

மண்டபத்தில் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட தமிழ் முஸ்லீம் பாடசாலை மாணவர்கள் இளையோர் முத்தமிழ் அரங்கினை நடத்தினர். இதற்கெனவே பல போட்டிகள் நடத்தப்பட்டன. விவாதப்போட்டி, பேச்சுப்போட்டி, கவிதைப்போட்டி, நாடகப்போட்டி, நடனங்கள் என்பன இடம்பெற்றன.

மலேஷிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் திலகவதி, சிங்கப்பூர் கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் சுப. திண்ணப்பன் ஆகியோர் முறையே இரண்டு தினங்களும் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினர்.

மாண்புமிகு அமைச்சர்களான செள. தொண்டமான், பி. பி. தேவராஜ், திருமதி. புலேந்திரன் ஆகியோர் மாணவர்களின் பெருமுயற்சியைப் பாராட்டினர். கல்வி இராஜாங்க அமைச்சு, பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் அனைவரும் பூரண ஒத்துழைப்பு நல்கியமை இரண்டு தினங்களையும் சிறப்பு மிக்கதாக்கியது.

முத்தமிழ் அரங்கப்போட்டிகளில் பங்குகொண்டு பரிசுபெற்ற மாணவர்களுக்கு பரிசுவழங்கும் வைபவம், ஜூன் மாதம் 7ம் திகதி காலை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது. இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பரிசில்களையும், சான்றிதழ்களையும் வழங்கியதோடு மாணவர்களின் ஆர்வத்தையும், முயற்சியையும் பாராட்டி வாழ்த்தினார்.

## கலை அரங்கு

மேமாதம் 8ம் திகதி மாலை பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் இடம்பெற்ற கலை அரங்கிற்கு மாண்புமிகு அமைச்சர்களான இராஜமனோகரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலேந்திரன், ஏ. எச். எம். அஸ்வர், கொழும்பு மாநகர உதவி முதல்வர் திரு. கே. கணேசலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். செல்வி தேவகி கண்ணுத்துரையின் புல்லாங்குழல் இசை, ஹப்புத்தளை தமிழ் மகாவித்தியாலய மாணவியரின் கிராமிய நடனம், திருமதி வசந்தகுமாரி சூரியகுமாரனின் பரதநாட்டியம், செல்வி சாந்தினி சுப்பிரமணியத்தின் இசைக்கச்சேரி, அப்சராஸ் எஸ். ரங்கனின் தபேலாக் கச்சேரி, திருகோணமலை சண்முகவித்தியாலய மாணவியரின் கிராமிய நடனம் என்பன அன்று சிறப்புக்கலை நிகழ்ச்சிகளாக அமைந்திருந்தன.

## இசைநடன நாடக அரங்கு

9ம் திகதி மாலை புதிய கதிரேசன் மண்டபத்தில் இசை, நடன நாடக அரங்கு இடம் பெற்றது. சுற்றுலா கிராமியத் தொழிற்துறை அமைச்சர் மாண்புமிகு சௌ. தொண்டமான் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு அன்றைய நாளைச் சிறப்பித்தார்.

அன்றைய கலைநிகழ்ச்சிகளில் என். ரகுநாதனின் தமிழிசைக் கச்சேரி, பரத கலாநிதி சிவானந்தி ஹரிதர்ஷனின் மாணவியர் அளித்த பரதநடனம், ரி. வி. பிச்சையப்பா, டி.வி. விநாயகமூர்த்தி ஆகியோரின் வயலின் இசை, திருமதி நிர்மலா

## சாகித்திய விழாவில் இலக்கியப் பரிசில்கள் பெற்றோர்

**''இலக்கியச் செம்மல்'' பட்டமும் விருதும்** (தமிழியலுக்கு ஆற்றிய சிறந்த சேவைக்காக)

திரு. எஸ். டி. சிவநாயகம்
திரு. நா. முத்தையா
திரு. இ. சிவகுருநாதன்
ஜனாப் சுபைர் இளங்கீரன்

**''இலக்கிய வித்தகர்'' பட்டமும் விருதும்** (1990ம் ஆண்டின் சிறந்த நூல்களுக்கான பரிசு)

திரு. எஸ். அகஸ்தியர்
திரு. பா. சத்தியசீலன்
திரு. மேமன் கவி
திரு. காரை செ. சுந்தரம்பிள்ளை
திருமதி. தனபாக்கியம் குணபாலசிங்கம்
திரு. குமாரலிங்கம் ரஞ்ஜகுமார்

**''தமிழ் மணி'' பட்டமும் பரிசிலும்** (இலக்கியப் பணிக்காக)

புலவர் நா. சிவபாதசுந்தரனார்
திரு. அந்தனி ஜீவா
திருமதி. அன்னலட்சுமி இராஜதுரை
திரு. ஆர். ஆறுமுகம் (தமிழோவியன்)
திரு. ரி. இராஜகோபால்
திரு. பொன். இராஜகோபால்
திரு. இ. கந்தசாமி
புலவர் த. கனகரத்தினம்
திரு. செ. குணரெத்தினம்
திரு. இ. சண்முகம்
திரு. க. ப. சிவம்
திரு. கே. எஸ். சிவகுமாரன்
திரு. கே. சுபாஷ் சந்திரபோஸ்
பேராசிரியர் சுனில் ஆரியரட்ன
திரு. எம். ஆர். சுப்பிரமணியம்
திரு. வே. சுப்பிரமணியம் (முல்லைமணி)
திரு. எஸ். நடராஜா
திரு. இரா. நாகலிங்கம் (அன்புமணி)
திரு. ரி. பாக்கியநாயகம்
திருமதி. பாலேஸ்வரி நல்லரெத்தினசிங்கன்
ஜனாப். மானா மக்கீன்
திருமதி. யோகா பாலச்சந்திரன்
திரு. பி. வேலு (குறிஞ்சித் தென்னவன்)
திரு. தெளிவத்தை எஸ். ஜோசப்
ஜனாப். எஸ். எம். ஹனிபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோனின் பரதநாட்டியம் மட்டக்களப்பு விபுலானந்த இசைநடனக்கல்லூரி மாணவியரின் பாரம்பரிய நடனம், கொழும்பு றோயல் கல்லூரி மாணவர்களின் நாடகம் என்பன இடம்பெற்றன.

## மங்கலப் பெருவிழா

விழாவின் இறுதிநாளான 10ம் திகதி மாலை இலக்கிய விருதுகள் வழங்கும் மங்கலப் பெருவிழா பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் நடை பெற்றது. மாண்புமிகு பிரதமர் டி. பி. விஜயதுங்க அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நான்கு தமிழறிஞர்களுக்கு 'இலக்கியச் செம்மல்' விருதும், ஆறு எழுத்தாளர்களுக்கு 'இலக்கிய வித்தகர்' விருதும், இருபத்தைந்து தமிழ்ப் படைப்பாளிகளுக்கு 'தமிழ்மணி' விருதும் அளித்து கௌரவித்தார்.

கலைநிகழ்ச்சிகளில் செல்வன் பி. ஞானவரதனின் புல்லாங்குழலிசை, திருமதி நளினி சிவகுமாரன் மாணவியரின் கிராமிய நடனம், திருமதி வாசுகி ஜெகதீஸ்வரன் மாணவியர் அளித்த பரதநாட்டியம், திருமதி கௌரி கண்ணனின் கொட்டலை நுண்கலை ஒன்றியம் அளித்த மலையக நாட்டார் நடனம், வவுனியா இரம்பைக் குளம் தமிழ் மகாவித்தியாலய மாணவியரின் 'பண்டாரவன்னியன்' நாடகம் என்பன இடம்பெற்றன.

## பழக்கம்

இருட்டான அறைக்குள் நுழையும்போது நாம் எதையும் செய்ய முற்படுவதில்லை. முதலில் விளக்கை ஏற்றுகிறோம். அதற்குப் பிறகே அந்த அறை காரியங்களைச் செய்வதற்குரிய தகுதியைப் பெறுகிறது. இருட்டான அறையில் நின்று கொண்டு நாம் எவ்வளவு சாமர்த்தியமாகக் காரியங்களைச் செய்தாலும் பலன் தராது. தடுக்கி விழுவதுதான் மிச்சமாக இருக்கும். ஆகவே, இருட்டை விரட்ட முதலில் இருளுக்கு நேர்எதிரான வெளிச்சத்தைக் கொண்டு வரவேண்டும். அதே போலத் தீயகுணங்களை விரட்ட அதற்கு நேர்எதிரான நல்லகுணங்களை உள்ளே புகுத்த வேண்டும். அப்போது மனத்தில் இருந்த தீய எண்ணங்கள் தன்னாலே வெளியேறிவிடும். இதை நமது முன்னோர்கள் 'பிரதிபட்ச பாவனை' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

குழந்தை உள்ளத்தில் கெட்டவை வெகுசீக்கிரத்தில் இடம்பெற்று விடும். அவற்றைக் கண்டிப்பதாலும், தண்டிப்பதாலும் மட்டும் அகற்றிவிட முடியாது. அதற்கு நேர்எதிரான நல்லவை அங்கே இடம்பெற வேண்டும். அதை நாம் சாதுரியமாகச் செய்ய வேண்டும். குழந்தை தூங்கப் போகும்போது நல்ல கதைகளைச் சொல்லுங்கள். நீதிக் கதைகளையும், புண்ணியக் கதைகளையும் சொல்லுங்கள். குழந்தை அதைக் கேட்டுக் கொண்டே தூங்கிவிடும். தூக்கத்திலும் இந்த நல்ல சிந்தனை வேலை செய்யும். உள்ளே இருக்கக்கூடிய கெட்டஎண்ணங்களை விரட்டி விடும். இதற்காகத்தான் அந்தநாளில் வீட்டில் தாய் அல்லது பாட்டி குழந்தைக்குக் கதை சொல்லித் தூங்கச் செய்யும் பழக்கத்தை வளர்த்தார்கள்.

அமெரிக்காவில் இன்று இதை விஞ்ஞானபூர்வமாகச் செய்கிறார்கள். நல்ல எண்ணங்களைக் கூறும் சொற்களை (POSITIVE – THOUGHTS) சிறிய 'டேப்'பில் பதிவுசெய்து படுக்கப் போகும்போது தலையணைக்கு அருகில் வைத்துக் கொள்ளுகிறார்கள். தூங்கும்போது அந்த நல்ல சொற்கள் சிந்தனையில் நல்ல பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. கெட்டவர்களும்கூட இந்த முறையில் மனம் திருந்தி விடுகிறார்கள். இதைத்தான் அன்று நமது முன்னோர்கள், வீட்டில் குழந்தைகள் தூங்கப்போவதற்கு முன் கதை சொல்லும் பழக்கமாக ஏற்படுத்தி வைத்தார்கள்.

—சுவாமி பூர்ணானந்த தீர்த்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திணைக்களச் செய்திகள்

## தசாவதானியின் நினைவாற்றற் கலைநிகழ்ச்சி

தமிழகத்தைச் சேர்ந்த தசாவதானி யான திருக்குறள் இரா. கனகசுப்புரத் தினத்தின் நினைவாற்றற் கலைநிகழ்ச்சி ஏப்ரல் மாதம் 3ம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு உல்லாசப் பயணத்துறை அமைச் சின் செயலாளர் திரு. என். சிவதாஸன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் பத்துக்கும் மேற்பட்ட விடயங்களை நினைவில் இருத்தி திரு. சுப்புரத்தினம் தனது நினை வாற்றற் திறனை வெளிப்படுத்தினார்.

## சுவாமி ஸ்மரனாநந்தா சொற்பொழிவு

சென்னை இராமகிருஷ்ண மிஷன் மடத்தலைவரான சுவாமி ஸ்மரனாநந்தா ஏப்ரல் மாதம் 5ம் திகதி மாலை திணைக் களக் கேட்போர் கூடத்தில் ''நவீன மனி தனுக்கான சமயம்'' எனும் தலைப்பில் ஆங்கிலத்தில் சொற்பொழிவு நிகழ்த்தி னார். இச்சொற்பொழிவுக்கு இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் தலைமை வகித்தார். வெள்ளவத்தை இராம கிருஷ்ண மிஷன் சுவாமிகளான சுவாமி ஆத்மகனாநந்தா, சுவாமி ஜீவானந்தா, சுவாமி அஜிராத்மானந்தா ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

## இந்து கலைக்களஞ்சியம் தொகுதி — 2

இந்து கலைக்களஞ்சியத்தின் தொகுதி இரண்டின் தொகுப்பு வேலைகள் நிறை வுற்றபின் பதிப்பிப்பதற்காக நூலின் பதிப்பாசிரியர் குழுத்தலைவரான கலாநிதி சி. பத்மநாதன் இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்களிடம் உத்தி



திணைக்களம் நடாத்தும் சொற்பொழிவுத் தொடரில் உரைநிகழ்த்தியோர் – இடமிருந்து வல மாக, முறையே இரா. கனகசுப்புரத்தினம், சுவாமி ஸ்மரனாநந்தா, திருமதி சூடாமணி சடகோபன், க. நாகேஸ்வரன், சுவாமி அமோகா லீலாதாஸ் ஆகியோர் காணப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக அரங்கிற்கு ஒரு தமிழ் நாவல்

—கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி—

கடந்த முப்பது ஆண்டுகளில் வெளிவந்த தமிழ் நாவல்கள் ஏற்படுத்திய சாதனை பற்றிய கருத்தரங்கில் சில குறிப்பிட்ட நாவல்கள் மட்டுமே கருத்திற்கொள்ளப்பட்டிருந்தன. கருத்தரங்கு அமர்வினை நன்கு அவதானித்தபின் திரு. சிவத்தம்பி அவர்கள் பேசுகையில் கூறியதாவது:-

''நாவல், உலகப் பொதுவான ஒரு இலக்கிய வடிவம். தமிழுக்கு நாவல் என்ற வடிவம் புதியது. ஏறத்தாழ 125 ஆண்டுகளுக்குட்பட்டது. இந்த தமிழ் நாவல் பற்றிப் பேசுகிற நாம் இரண்டு பிரதான விடயங்களை கருத்தில்கொள்ள வேண்டும். ஒன்று தமிழில் ''நாவல் என்ற வடிவம்'' பெற்றுள்ள இடம். மற்றது உலக நாவல் இலக்கியத்தில் ''தமிழ்'' பெற்றுள்ள இடம். எந்தத் தமிழ் நாவலைக் கையில் வைத்துக்கொண்டு உலக அரங்கிற்கு நாம் செல்லலாம். அத்தகைய நாவல் தமிழில் உண்டா என்பது சிந்தனைக்குரியது.

உண்மையில் 60ஆம் ஆண்டுகளுக்குப் பின் தமிழ் நாவல்துறை வளர்ச்சிபெற்றது என்பது உண்மையே. ஆயினும் உலக அரங்கிற்கு நாம் ஏதும் பங்களிப்புச் செய்யவில்லை.

ஒரு இலக்கிய வடிவம், அக்காலகட்டத்தின் சமூக வாழ்வைப் படம் பிடிக்கிறது. நாவலில் மட்டுமே, காத்திரமாகவும், கனதியாகவும், வாழ்க்கையை விளக்க முடியும். அந்த வகையில், தமிழ் மக்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறிய தமிழ் எழுத்தாளர் எவருமே இல்லை.

நாம் இரண்டு பண்பாடுகளைப் பற்றி தமிழ் நாவல்களில் பேசுகிறோம். வெகுசன கலாசாரம், மேல்மட்ட கலாசாரம் என்ற இரண்டிலுமே வாழ்க்கைப் பிரச்சினைகள் பேசப்பட்டனவே தவிர, **வாழ்க்கை** விளக்கப்படவில்லை.

எந்த மொழியின் இலக்கியமும், அந்த மொழி தோன்றிய நாட்டின் அனுபவமாகும். அந்த வகையில் உலகிற்கு ஏந்திச்செல்ல ஒரு தமிழ் நாவல் இல்லை என்றே கூறவேண்டும். அத்துடன் ''தமிழிலக்கியத்தில் நவீனத்துவம்'' என்ற சிந்தனை அடையாளம் காணப்படவேண்டும்.

(ஏப்ரல் 25ம் திகதி இடம்பெற்ற கருத்தரங்கின்போது)

யோகபூர்வமாகக் கையளித்தார். தற்போது இத்தொகுதி அச்சில் உள்ளது.

இத்தொகுதியில் 'உ' தொடக்கம் 'ஔ' வரையிலான 600 சொற்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இவை இந்து சமய, சமூக, சரித்திர, பண்பாட்டு விடயங்களோடு தொடர்புடையவையாகும். இக்கலைக்களஞ்சியத்தின் முதலாவது தொகுதி 1990ம் ஆண்டு அமைச்சினால் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## புத்தள - கிராமஎழுச்சி

புத்தள பாராவில அரச பெருந்தோட்டத்தில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் மொனராகலையில் இடம்பெற்ற 14வது கிராம எழுச்சி திட்டத்தை முன்னிட்டு புனரமைப்பு செய்யப்பட்டிருந்தது. ஜூன் மாதம் 17ம் திகதி காலை நடைபெற்ற ஆலய கும்பாபிஷேக வைபவங்களை மருதானை கப்பித்தாவத்தை கோவிலைச் சேர்ந்த ஸ்ரீ ராதா கிருஷ்ண குருக்கள் நடாத்தி வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவாமி விபுலாநந்தர் பற்றிய ஆங்கிலக் கருத்தரங்கில் கலாநிதி ராதிகா குமாரசுவாமி, பேராசிரியர் ஏ. ஜே. குணவர்த்தன, கலாநிதி சி. பத்மநாதன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேனகுரே, இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சர் பி பி. தேவராஜ் அமைச்சின் செயலாளர் திரு. கா. தயாபரன், திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம், ஆராய்ச்சி அலுவலர் திரு. எஸ். தெய்வநாயகம், கலாசார அலுவலர் திரு. ஆ. சண்முகநாதன் ஆகியோர் பூஜை நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பித்தனர்.

## நேர் முகப்பரீட்சை

மட்டக்களப்பு விபுலாநந்த இசைக் கல்லூரி இசைநடன ஆசிரியர்களுக்கான நேர்முக பரீட்சை ஜுலை மாதம் 3ம் திகதி இந்துசமய திணைக்களத்தில் நடைபெற்றது.

## சேக்கிழாரின் கவிநலன்

இந்துப் பேருரைத் தொடரின் 47வது பேருரை ஜுன் மாதம் 13-ம் திகதி திணைக்களக் கேட்போர் கூடத்தில் திருமதி. வசந்தா வைத்தியநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. க. நாகேஸ்வரன்' 'சேக்கிழார் கவிநலன்'' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார். இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

## விபுலாநந்தர் பணிகள் - ஆங்கிலக் கருத்தரங்கு

திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த சுவாமி விபுலாநந்தர் வாழ்வும் பணிகளும் தொடர்பான ஆங்கில கருத்தரங்கு ஜுன் மாதம் 28ம் திகதி மாலை திணைக்

### கிழக்கும் மேற்கும்

மேலை நாடுகளிலுள்ள சமுதாய வாழ்க்கைமுறை கணீரென்று சிரிப்பதைப் போன்றதாகும். ஆனால் அதன் அடியில் அழுகையும் புலம்பலும் மறைந்திருக்கின்றன. அதன் முடிவும் தேம்பி அழுவதாகவே அமையப்போகிறது. மேற்புறத்தில் மட்டுமே வேடிக்கையும் விளையாட்டும் அங்கு காணப்படுகின்றன. ஆனால் உண்மையில் அளவில்லாத துயரமே நிறைந்திருக்கிறது.

மாறாக - இந்த நாட்டிலோ வெளிப்படையாக இருளும் துயரமும் காணப்படுகின்றன. ஆனால் அவற்றின் அடியிலே கவலை இன்மையும் மகிழ்வும் மறைந்திருக்கின்றன.

—சுவாமி விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. பேராதனை பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் எஸ். பத்மநாதன், களனி பல்கலைக்கழக பேராசிரியர் ஏ. ஜே. குணவர்தன இனத்துவ ஆய்வுகளுக் கான சர்வதேச நிலையப் பணிப்பாளர் கலாநிதி. ராதிகா குமாரசுவாமி ஆகி யோர் கருத்துரை வழங்கினர். இரா ஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் இக்கருத்தரங்கிற்கு தலைமை வகித்தார்.

## ஆடிவேல்விழா

பத்து ஆண்டுகளுக்குப் பின் ஜூலை 11ம் திகதி முதல் 15ந் திகதி வரை ஆடி வேல் விழா கொழும்பில் வெகுவிமரிசை யாக நடைபெற்றது.

ஜூலை 12ம் திகதி காலை காவடி இரதம் முதலாம் குறுக்குத் தெரு ஸ்ரீ கதிர் வேலாயுதசுவாமி கோவிலிலிருந்து புறப் பட்டு மாலை பம்பலப்பிட்டி சம்மாங் கோடு ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயத்தை அடைந்தது. இரதபவனியை பிரதம மந்திரி டி. பி. விஜயதுங்க அவர்கள் ஆரம் பித்து வைத்தார். காலை 10.30க்கு ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக ஜனா திபதி அவர்கள் வரவேற்றார்.

பிற்பகல் 1.30க்கு காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டிருந்த விசேட அரங்கில் இந்து கலாசார இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், திருமதிதேவராஜ், அமைச் சுச் செயலாளர் திரு கா. தயாபரன், அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் திருமதி கீதா நித்தியானந்தன், திணைக் களப் பணிப்பாளர் திரு. க. சண்முக லிங்கம், உதவிப்பணிப்பாளர்கள், திரு. குமார் வடிவேல், திரு. வீ. விக்கிரம

### நெஞ்சுக்கு நிம்மதி !

உலகில் எங்கு பார்த்தாலும் பிரச்சினைகள்! குற்றங்களும் சண்டைகளும் யுத்தங்களும் நின்றபாடில்லை. இயற்கை அழிவுகளும் பெருகிக் கொண்டிருக் கின்றன. பொருளாதாரப் பிரச்சினைகள், சூழல் வெப்பமடைதல், ஓஸோன் படைபற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவை அனைத்துக்கும் கீதை காட்டும் பாதையே தீர்வாகும்.

எமக்கு என இடப்பட்டுள்ள கடமைகளை சுயநலவிருப்பின்றி ஆற்றவேண்டும். இங்ஙனம் மனஒருமையோடு செம்மையாகச் செய்யப்படும் கடமைமூலம் நம்மை நாமே பரிசுத்தப்படுத்திக் கொள்ளமுடியும். அப்போது கடமையே கடவுள் வழி பாடாகவும் யோகமாகவும் மாறிவிடுகின்றது.

இறைவனை இறுகப் பற்றிக்கொள்ளும் பக்தன் இறப்பைக்கண்டு அஞ்சுவ தில்லை. ஒரு பூனை, ஒரு எலியையும், தனது குட்டியையும் தூக்கும்போது உள்ள வித்தியாசம் போல இறைபக்தன் அமைதியையும் பாதுகாப்பையும் உணரு கின்றான். தீய எண்ணங்கள் நிறைந்த மனிதன் அஞ்சி நடுங்குகின்றான்.

பக்தியுடன் இறைநாமத்தை உச்சரிப்பதே இந்தக் கலியுகத்துக்கு ஏற்ற இலகு வான வழியாகும். அதன்மூலம் எமது கட்டுகளில் இருந்தும் தளைகளில் இருந்தும் நாம் விடுபடலாம். சாத்வீக தாவர உணவும் நல்ல சிந்தனைகளும் எம்மை அமைதியும் நிறைவும் மிக்கவர்களாக்கும்.

—அமோகாலிலாதாஸ் அதிகாரி—
(ஜூலை 24ம் திகதி நடைபெற்ற கீதை சொற்பொழிவில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> கடலின் மேற்பகுதியில் அலை வீசுகிறது. மலைபோன்று அது உயர எழுகின்றது. ஆனால் ஆழமான அடி மட்டத்தில் அது அசையாதிருக்கிறது. மனிதனுடைய ஆழ்மனம் அங்ஙனம் அசையாதிருக்க வேண்டும். தெய்வசாந்தி நிலவுவதற்கு அந்த ஆழ்மனமே உற்ற இடமாகும்.
>
> —சுவாமி சித்பவானந்தர்

ராஜா ஆகியோர் இரதத்தை வரவேற்றனர்.

13ம் திகதி செட்டியார் தெருவிலிருந்து வெள்ளி இரதம் பம்பலப்பிட்டி கதிரேசன் ஆலயத்திற்கு புறப்பட்டது. அன்றும் பிற்பகல் அமைச்சர், அதிகாரிகள், காலிமுகத்திடலில் விசேட இரதத்தை வரவேற்றனர்.

இரண்டு தினங்களும் பிரபல இசைக் கலைஞர்களின் பக்திப்பாடல்களும், இன்னிசைக் கச்சேரிகளும் இடம்பெற்றன.

ஆடிவேல் விழாவுக்கென தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த [பிரபல கிளாரினட் இசைக்கலைஞர்] ஏ. கே. சி. நடராஜன் குழுவினர், நாதஸ்வரக் கலைஞர்கள் ஷேக் மெஹ்பூப், திருமதி காலிஷா பி மெஹ்பூப், புகழ்பெற்ற சொற்பொழிவாளர் திருமதி. இளம் பிறைமணிமாறன் ஆகியோருக்கு இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் தமது அமைச்சில்தேநீர் விருந்தளித்து கௌரவித்தார். இக்கலைஞர்களுக்கு ஞாபகார்த்தச் சின்னங்களும் வழங்கப்பட்டன.

## "வீழ்ந்தது இராஜநாகம்"
## "கம்பனும் கண்ணதாசனும்"

ஆடிவேல் விழாவிற்கு சிறப்புச் சொற்பொழிவாளராக இலங்கை வந்திருந்த தூத்துக்குடி மகாலட்சுமி கல்லூரிப் பேராசிரியை திருமதி இளம்பிறை மணிமாறன் ஜுலை 22, 23ம் திகதிகளில் திணைக்களக் கேட்போர் கூடத்தில் இரண்டு இலக்கிய உரைகள் நிகழ்த்தினார்.

வீழ்ந்தது இராஜநாகம் எனும் தலைப்பில் துரியோதனன் பற்றியும்; கம்பன், கண்ணதாசன் கவித்துவம் பற்றியும் இவ்வுரைகள் அமைந்திருந்தன. இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் இச்சொற்பொழிவுகளுக்கு தலைமை வகித்தார்.

## நவீன வாழ்விற்கு கீதை

திணைக்களம் நடாத்தும் பேருரைத் தொடரின் 48வது உரை ஜுலை 24ம்



கலைக்களஞ்சியம் தொகுதி இரண்டின் தொகுப்பு வேலைகள் முடிவுற்றபின் தொகுப்பாசிரியர் குழுத்தலைவரான பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்களிடம் கையளிக்கும் காட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேக்கிழார் கவித்திறன்

பெரிய புராணத்தில் சேக்கிழார் சுவாமிகள் காட்டும் அடியார்கள் மெய் நெறியாளர்கள்! உத்தமர்கள் எதையும் சிவனுக்காக உவந்தளிக்கத்தக்க ஈரநெஞ் சினர். அருள்வளத்தை அனுபவிப்பவர்களுக்குத் துயரம், துன்பம் தோன்றுவது மில்லை; தெரிவதுமில்லை. அடியவர்களது பெருவீரத்தை, ஓர்மத்தை, துணிவை, திண்மையான வைராக்கிய பக்தியை அருள்நாடி ஓடும் பாங்கை எப்படி எடுத்துக் கூறுவேன் என்று அவர்களை வியந்து பாராட்டும் பேருள்ளப்பாங்கு கொண்டவர் சேக்கிழார் சுவாமிகள்.

சேக்கிழார், அடியார் என்ற வேடத்துக்கு அதீத மதிப்பும் கௌரவமும் அன்பும், பக்தியும் செய்து பணிந்து, மகிழ்ந்து பாராட்டியவர். தொண்டர் தம் பெருமை சொல்லவு்ம் அரிதே என்பர். தொண்டுக்கு நிகர் எதுவுமில்லை. தொண் டர் தம் உயர்நெறிவாழ்வு இன்று மதிக்கப்படவில்லை. ஆனால் சேக்கிழாரது அன்புள்ளமும், அறிவுள்ளமும், ஆராய்ச்சியுள்ளமும் அடியவராகிய தொண்டர் களை பித்துப்பிடித்து அலைபவர்கள் போல் சிவனை எண்ணியெண்ணி இரங்கி உருகும் விசரர்கள் என்றெண்ணாது உள்ளத்துச் செம்மை வாய்ந்த வீரர்கள் – உறுதிப்பாடு மிக்கார்கள் – என்று போற்றி வணங்கி அங்கீகாரமளித்து உண்மைக் காவலர்கள் என்று துதித்து திருவடி தொழுகின்றது. தொண்டர்குலம் தொழு குலம் என்ற சிந்தனையின் தலைமை இலக்கியம் பெரிய புராணமாகும்.

க. நாகேஸ்வரன்
(ஜூலை 6ம் திகதி இடம்பெற்ற சொற்பொழிவில்)

திகதி இடம்பெற்றது. சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகத்தைச் சேர்ந்த அமோக லீலாதாஸ் அதிகாரி, ''நவீனவாழ்விற்கு கீதை'' எனும் தலைப்பில் ஆங்கிலத்தில் உரைநிகழ்த்தினார். இராஜாங்க அமைச் சர் பி. பி. தேவராஜ் அவர்கள் இந் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார். கழகத் தின் இலங்கைக் கிளைத்தலைவர் சுவாமி மஹாகர்த்தாதாஸ் அவர்களும் இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

சுவாமி அதிகாரி, கலிபோர்னியா பல்கலைக்கழக முதுமாணிப் பட்டதாரி யாவார். பலநாடுகளிலும் கீதைப் பேரு ரைகள் நிகழ்த்தியுள்ள இவர், கீதை தொடர்பான பல கட்டுரைகளை ஆங்கி லத்திலும், ஹிந்தி, உருது மொழிகளி லும் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலக்கிய மாலை - கண்டி

கண்டி இந்து வாலிபர் சங்கம், இந்து கலாசார இராஜாங்க அமைச்சின் அனு சரணையோடு இலக்கிய மாலை எனும் நிகழ்ச்சியை ஜுலை 26ம் திகதி மாலை கண்டி டி. எஸ். சேனநாயக்க பொது நூல்நிலைய கேட்போர் கூடத்தில் நடாத்தியது. இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், மத்திய மாகாண இந்துமாமன்றத் தலைவர் அ. துரை சாமிப்பிள்ளை ஆகியோர் பிரதம அதிதி களாகக் கலந்து சிறப்பித்தனர். கவிய ரங்கம், பட்டிமன்றம் என்பன சிறப்பாக நடைபெற்றன.

## நடமாடும் செயலகம் - கண்டி

செப்டெம்பர் மாதம் கண்டியில் நடைபெறவுள்ள ஜனாதிபதி நடமாடும் செயலகச் சேவைக்கு முன்னோடியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து கலாசார இராஜாங்க அமைச்சின் நடமாடும் செயலகச் சேவை, ஜுலை 26ம் திகதி கண்டி இந்து உயர் நிலைப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், அமைச்சின் செயலாளர் திரு. கா. தயாபரன், திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம், உதவிப் பணிப்பாளர்கள், திரு. குமார் வடிவேல், ஜனாப் ஏ. எம். நஹியா ஆகியோருட்பட திணைக்கள அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். இச்செயலகத்தின் போது கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த இந்து அமைப்புகளின் பிரச்சினைகள் கவனத்திற் கொள்ளப்பட்டன.

### அரசியல்

வாழ்க்கையில் நான் செய்ய வேண்டிய பணி என்ன என்பது எனக்குத் தெரியும். ஒரு குறிப்பிட்ட பிரிவினரிடம் அதிகப்பற்றும் வேறு ஒரு பிரிவினரிடம் தீவிர வெறுப்பும் கொண்டிப்பது என்பது என்னிடம் இல்லை. நான் இந்தியாவிற்கு எந்த அளவுக்கு சொந்தமானவனோ அதே அளவுக்கு உலகம் முழுவதற்கும் சொந்தமானவன். படித்த இந்துக்களிடையே நீ காணும் அந்தச் சாதிவெறிபிடித்த, மூடநம்பிக்கை கொண்ட, இரக்கமற்ற, போலித் தனம் மிக்க, நாத்திக மனம்கொண்ட கோழைகளில் ஒருவனாக வாழ்ந்து இறந்து போவதற்காகப் பிறந்தவன் என்றா என்னை நினைக்கிறாய்? கோழைத்தனத்தை நான் வெறுக்கிறேன். கோழைகளுடனோ அல்லது அர்த்தமற்ற அரசியலுடனோ எனக்கு எந்தவிதமான தொடர்பும் இல்லை. கடவுளும், உண்மையும் தான் இந்த உலகின் ஒரே அரசியல்! மற்றவை எல்லாம் வெறும் குப்பை தான்.

—சுவாமி விவேகானந்தர்

## கண்டியில் - நூல் கண்காட்சி

தரமான நூல்களை அறிமுகம் செய்தல், வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தல், இலக்கியத்தரமுள்ள நூல்களை பரிச்சயமாக்குதல் போன்ற நோக்கங்களை இலக்காகக் கொண்டு செயற்படும் திணைக்களப் புத்தகக்கழகம், ஜுலை 19, 20ம் திகதிகளில் கண்டி, டி. எஸ். சேனநாயக்கா பொதுநூலக மண்டபத்தில் நூல் கண்காட்சியையும், நூல் விற்பனையையும் ஒழுங்கு செய்திருந்தது. இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், நூல் கண்காட்சியைத் திறந்து வைத்தார்.

பெருந்திரளான இலக்கிய ஆர்வலர்களும், மாணவமாணவியரும் கண்காட்சியைப் பார்வையிட்டதோடு, தரமான நூல்களையும் கொள்வனவு செய்தனர்.

பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம், உதவிப் பணிப்பாளர்கள், திரு. வீ. விக்கிரமராஜா, ஜனாப் ஏ. எம். நஹியா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

திணைக்களத்தின் நிர்வாக அலுவலரும், புத்தகக் கழக அமைப்பாளருமான திரு. என். சோமகாந்தன் அவர்கள், கண்டி பொதுநூலக நூலகர், திருமதி. இரட்னாயக்க, மாநகரசபை உறுப்பினர் திரு. மதியுகராஜா ஆகியோரின் உதவியுடன் கண்காட்சியை சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறநெறிப்பாடசாலை ஆசிரியர் கருத்தரங்கு

திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகளுள் ஒன்றாக அறநெறிப்பாடசாலைகளை ஊக்கமளித்தல் வளர்ச்சி பெற்று வருகின்றது. இளம் பராயத்திலேயே சமய நம்பிக்கையையும், நல்லுணர்வுகளையும் ஊக்குவித்தல் அமைதியும், நம்பிக்கையும் நிறைவுந் தரும் எண்ணங்களை வளர்த்தல் என்பன அறநெறி வகுப்புகளின் மூலம் இளம் இந்துச் சிறார்களுக்கு கற்பிக்கப்படுகின்றன.

திணைக்களம் கடந்த இரண்டு ஆண்டுகளாக அறநெறிப்பாடசாலைகளை பதிவு செய்து வருகின்றது. இதுவரை 225 அறநெறிப்பாடசாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சில பகுதிகளின் சீரற்ற நிலைகாரணமாக இயங்காத பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளுக்கு வருட ஆரம்பத்தில் திணைக்களம் ஒரு சிறு தொகையை ஊக்குவிப்பு நிதியாக வழங்கியது.

தற்போது இப்பாடசாலைகள் ஆலய மண்டபங்களில் நடக்கின்றன. பதிவு செய்யப்பட்டுள்ள 18 மாவட்டங்களில் 900 க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் தொண்டு அடிப்படையில் கற்பிக்கின்றனர். 25,000 க்கும் மேற்பட்ட இந்து மாணவர்கள் அறநெறிப் போதனை பெறுகின்றனர்.



அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான பாடத்திட்டம், சைவ சமய சாரம், பன்னிரு திருமுறைத்திரட்டு ஆகிய நூல்களின் வெளியீட்டின்போது இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனாநந்தா அவர்களிடம் முதற்பிரதிகளைக் கையளித்தார். படத்தில் இராஜாங்கச் செயலாளர், திரு. கா. தயாபரன், புலவர் க. சிவானந்தன், பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலயங்கள் தோறும் அறநெறிப்பாடசாலைகள் என்ற தீர்மானத்தை, இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் வாசித்தபோது, கலந்துகொண்ட ஆலய அறங்காவலர்கள், பிரமுகர்கள் ஏகமனதாகக் கையுயர்த்திச் சம்மதம் தெரிவித்தனர்.

இங்ஙனம் அறநெறிப்பாடசாலைகளிற் கற்பிக்கப்படும் ஆசிரியப் பிரதிநிதிகளுக்கான கருத்தரங்கும் பாடத்திட்டம், நூல்களின் வெளியீடும், ஜூலை மாதம் 11ம் திகதி திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றன. இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

அன்று காலை இடம்பெற்ற கருத்தரங்கிற்கு பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்கள் தலைமை வகித்தார். தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரம், பாடநூல் வெளியீட்டுச் சபை முன்னாள் செயலாளர் திரு. பெ. கணநாத பிள்ளை, வைத்திய கலாநிதி வி. ஜெகந்நாதன், கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி பூமணி குலசிங்கம் ஆகியோர் சிறப்புரைகள் வழங்கினர்.

ஆசிரியர் கலந்துரையாடலைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. க. நாகேஸ்வரன் தொகுப்புரை வழங்கினார்.

அன்று பிற்பகல் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் அவர்கள் தலைமையில் பாடத்திட்டம், நூல்கள் என்பன வெளியிட்டுவைக்கப்பட்டன.

காலை நடைபெற்ற கருத்தரங்கினை திருமதி சாந்தி நாவுக்கரசன் தொகுத்து வழங்கினார். அறநெறிப்பாடசாலைகளின் தொழிற்பாடுகள் பற்றி உதவிப் பணிப்பாளர் திரு, வீ. விக்கிரமராஜா விளக்கமளித்தார்.

'ஆலயமணி' ஆசிரியர் புலவர் க. சிவானந்தன் 'சைவ சமயசாரம்' 'பன்னிரு திருமுறைத் திரட்டு' ஆகிய நூல்களை அறிமுகம் செய்தார்.

இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் இந்நூல்களை வெளியிட்டு வைத்தார். இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனாநந்தா அவர்களும், இராஜாங்கச் செயலாளர் திரு. கா. தயாபரன் அவர்களும் வாழ்த்துரைகள் வழங்கினர்.

கருத்தரங்கிற் கலந்துகொண்ட ஆசிரியர்களுக்கு சான்றிதழ்களும் நூல்தொகுதிகளும் வழங்கப்பட்டன. நிர்வாக அலுவலர் திரு. என். சோமகாந்தன் அவர்களின் நன்றியுரையுடன் முழுநாள் நிகழ்ச்சிகள் இனிது நிறைவுபெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகடனம்

# ஆலயங்கள் தோறும்
# அறநெறி வகுப்புகள்

கருத்தரங்கன்று பிற்பகல் கலந்துகொண்டிருந்த ஆலய அறங்காவலர்கள், இந்து நிறுவனப் பிரதிநிதிகள், ஆசிரியர்கள் முன்னிலையில் **' ஆலயங்கள் தோறும் அறநெறிப்பாடசாலைகள் '** நிகழ வேண்டுமென்ற தீர்மானத்தை இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் பிரகடனப்படுத்தினார். பிரதிநிதிகள் அனைவரும் ஏகமனதாகக் கையுயர்த்தி இப்பிரகடனத்தை ஏற்றுக்கொண்டனர். பிரகடனம் பின்வருமாறு:-

இன்று 1992 ஜூலை மாதம் 11 ஆம் நாள் இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சரின் முன்னிலையில், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களக் கேட்போர்கூடத்தில் கூடியுள்ள, ஆலயங்களின் அறங்காவலர்கள், இந்துசமய நிறுவனங்களின் பிரதிநிதிகள், நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள அறநெறிப் பாடசாலைகளில் சமய போதனைத் தொண்டு புரிந்துவரும் ஆசிரியர்கள் பின்வருமாறு தீர்மானிக்கின்றோம்.

1. அரசாங்கத்தின் பாடவிதானத்துக்கு மேலதிகமாக சமய அறிவையும் ஒழுக்கத்தையும் நற்பண்புகளையும் இளம் சமுதாயத்தினரிடத்து வளர்ப்பதில் அறநெறிப் பாடசாலைகள் முக்கிய பங்கு வகித்து நாட்டிற்கு நற்பிரசைகளை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டிருப்பதனால், ஆலயங்களும் இந்து நிறுவனங்களும் அறநெறிப் பாடசாலைகளை அமைத்து நடத்த முன்வருவதைப் பிரதானமான சமுதாயப் பணியாகக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

2. இவ்வாறான அறநெறிப் பாடசாலைகளிற் பயிலும் மாணவர்களுக்கான வசதிகள், அங்கு கற்பிக்கும் தொண்டை மேற்கொள்ளும் ஆசிரியர்கட்கான சன்மானங்கள், பாடசாலை இயங்குவதற்கான கட்டிடம், தளபாடம் போன்றவற்றிற்கான வளத்தை, சம்பந்தப்பட்ட ஆலயங்களும் நிறுவனங்களும் தமது வளத்திலிருந்தும், நலன்விரும்பிகளின் உதவியைப் பெற்றும் தேடிக்கொள்ள வேண்டும்.

3. ஆண்டுதோறும் சிறுதொகையை மானியமாக வழங்குவதோடு அறநெறிப் பாடசாலைகளிற் பயிலும் மாணவர்களுக்கான பாடநூல்களையும், ஆசிரியர்கட்கான பயிற்சிகளையும், வழிகாட்டிகள் போன்றவற்றையும் இந்துசமய கலாசார அமைச்சும், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் வழங்குவதே மிகப் பயனுள்ளதாக அமையும் எனக் கருதுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கும் இங்கும்

★ தலாவாக்கலையில் கட்டப்படவுள்ள ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் புதிய கலாசார மண்டபத்துக்கான அடிக்கல்லை இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், ஏப்ரல் மாதம் 5ம் திகதி காலை நாட்டி வைத்தார். இவ்வைபவத்தின் போது தலவாக்கலை நகரசபை உபதலைவர் திரு. கே. கோவிந்தராஜ் அவர்களும் கலந்துகொண்டார்.

★ சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழா மே மாதம் 3, 4, 5ம் திகதிகளில் மட்டக்களப்பு விபுலாநந்த இசைநடனக் கல்லூரியில் வெகு கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர், இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர். இசை, நடனக் கல்லூரி மாணவர்களின் இசை, நடன நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. மட்டக்களப்பு விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச் சபைத் தலைவரும், அரச அதிபருமான திரு. இரா. மோன குருசாமி விழாவுக்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார்.

★ இலங்கை சின்மயா மிஷன் ஆதரவில், பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்

## ஜெர்மனியில் இந்துமாநாடு

ஐந்தாவது ஐரோப்பிய இந்து மாநாடு, ஆகஸ்ட் 28ம் திகதி முதல் 30ம் திகதி வரை ஜெர்மனியிலுள்ள பிராங்க்போர்ட் நகரில் நடைபெறவுள்ளது. விஷ்வ ஹிந்து பரிஷத்தின் ஐரோப்பிய மத்திய குழு இதனை நடாத்துகின்றது.

உலகின் பல்வேறு பாகங்களிலும் இருந்து ஆன்மீக அறிஞர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகின்றனர்.

'நவீன உலகில் இந்துமதம்' என்பதே இம்மாநாட்டின் கருப்பொருளாகும். சர்வதேச சகோதரத்துவத்தை வளர்த்தல், இந்துமதத்தின் பெருமையை அனைவரும் உணரச்செய்தல், இந்துமக்கள் எதிர்நோக்கும் சவால்களுக்கான நடவடிக்கைகள் பற்றி ஆலோசித்தல் என்பன மாநாட்டின் நோக்கங்களாகும்.

## கொழும்பு இந்துமகளிர் மன்றம்

கொழும்புவாழ் இந்துமகளிர் ஒன்றிணைந்து இந்துமகளிர் மன்றத்தினைத் தோற்றுவித்துள்ளனர். மன்றம் தொடங்கப்பட்ட வேகத்துடன், பயனுள்ள பணிகளை ஆற்ற முனைந்துள்ளது. இவர்களின் முதற்பணியாக கண்காட்சியும் விற்பனைக் கூடமும் இடம்பெற்றன. சமூகப் பணிகளோடு, கொழும்பில் இந்துப் பெண்களுக்கு ஒரு விடுதியை அமைப்பதையும் மன்றம் தனது இலட்சியமாகக் கொண்டுள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென்னையில் திருக்குறள் மாநாடு

உலகத்தமிழ்மறை கழகத்தின் 25 வது உலகத்திருக்குறள் மாநாடு ஆகஸ்ட் 7, 8, 9ம் திகதிகளில் சென்னை – 27, வடக்கு போக் சாலையில் அமைந்துள்ள, வசந்தமகால் மண்டபத்தில் நடைபெறுகின்றது. தமிழக நிதியமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் இம் மாநாட்டை ஆரம்பித்துவைக்கின்றார்.

'உலகமக்கள் ஒன்றுபட்டு இன்புற்று வாழ்வதற்கு அறிவியல் அடிப்படையில் தமிழ் மறை காட்டும் வழி' என்பதே மாநாட்டின் கருப்பொருளாகும்.

இலங்கையின் உத்தியோகபூர்வமான பிரதிநிதிகளாக இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு. கா. தயாபரன் அவர்களும், இந்துத் திணைக்கள ஆராய்ச்சி அலுவலர் திரு. எஸ். தெய்வநாயகம் அவர்களும் இம்மாநாட்டிற் கலந்து கொள்கின்றனர்.

தில் மே மாதம் 16ம் திகதி முதல் 21ம் திகதி வரை தினமும் மாலை 6.30 மணிக்கு பகவத்கீதை தொடர் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. பம்பாய் வேதாந்த வாழ்வு நிறுவன ஸ்தாபகரும் உலகப் புகழ் பெற்ற கீதை சொற்பொழிவாளருமான சுவாமி ஏ. பார்த்தசாரதி சொற் பொழிவுகளை நிகழ்த்தினார்.

★ கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களின் மணிவிழா மே மாதம் 16ம் திகதி நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெற்றது. யாழ். பல்கலைக் கழக மருத்துவபீடத் தலைவர் திரு. செ. சிவஞானசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், திரு. சிவத்தம்பி தம்பதியர் தமிழ் அன்பர்களால் பாராட்டி

## கொழும்பில் இந்து இளைஞர் மன்றம்

ஏறத்தாழ பத்தாண்டுகளுக்குப் பின் கொழும்பில் இந்து இளைஞர்கள் ஒன்று கூடி இந்து இளைஞர் மன்றத்தைத் தோற்றுவித்துள்ளனர்.

ஆலயங்களைச்சார்ந்த சமயப்பணிகளை மட்டுமன்றி, இந்துசமய மக்களில் நலிவுற்றோர், வறியோர் மத்தியிலும் தியாக உணர்வுடன் சமூகப்பணிகளை ஆற்ற இம்மன்றம் தன்னை அர்ப்பணிக்க முன்வந்துள்ளது.

இம்மன்றம் தனது பணிகளை இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சுடனும் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் உடனும் இணைந்து நடாத்தத் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மன்றத்தின் போஷகர்களாக இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனாநந்தா, பிரம்மஸ்ரீ பாலரவி சங்கரக் குருக்கள் ஆகியோர் விளங்குகின்றனர்.

மன்றத்தினர் தமது முதற்பணியாக, ஆடிவேல் ரதபவனியை பம்பலப்பிட்டி லொறிஸ்வீதி முன்பாக வரவேற்று விஷேட பூஜைகள் நடாத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவிக்கப்பட்டனர். யாழ். கல்லூரி அதிபர் கலாநிதி ஜெபநேசன், எழுத்தாளர் சொக்கன் ஆகியோரும் பல அறிஞர் பெருமக்களும் பேராசிரியரின் பன் முகப்பணிகளைப் போற்றிப் பேசினர்.

★ ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் 75 வது ஜயந்தி விழா தென்மராட்சி ஜீவன சங்கம், கந்தசுவாமி கோவில் பரிபாலன சபை ஆதரவுடன் கோவில் மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சாவக்கச்சேரி நீதிபதி திரு. மு. திருநாவுக்கரசு விழாவிற்குத் தலைமை வகித்தார். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார். யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத் தலைவர் பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் தமிழ்த்துறை பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோர் திரு. முத்தையாவின் பணிகளைப் பாராட்டிப் பேசினர்.

★ ஜூன் மாதம் 14ம் திகதி மாலை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் கொழும்பு விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச்சபை ஏற்பாடு செய்திருந்த நூற்றாண்டு விழா இடம்பெற்றது. சபைத்தலைவர் திரு. க. செல்வரத்தினம் தலைமை வகித்தார். கௌரவ அமைச்சர்களான பி. பி. தேவராஜ், எம். ஏ. அப்துல் மஜீத், திருமதி இராஜமனோகரி புலேந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனாநந்தா ஆசியுரை வழங்கினார். பேராசிரியர் பொ. பூலோகசிங்கம் சிறப்புரை நிகழ்த்தினார்.

## சூடாமணி சடகோபன்

தமிழகம் தஞ்சாவூரைச் சேர்ந்த திருமதி சூடாமணி சடகோபன், இரத்தொட்டை ஸ்ரீ செல்வவினாயகர் ஆலயத் தேர்த்திருவிழாவில் சொற்பொழிவுகள் நடத்துவதற்காக திரு. பாஸ்கரன் என்ற அன்பர் மூலம் ஏப்ரல் மாதம் 1ம் திகதி இலங்கை வந்திருந்தார். இரத்தொட்டை நிகழ்ச்சிகள் நிறைவுற்ற பின்னர் இந்துகலாசார இராஜாங்க அமைச்சு ஏற்பாட்டில், திருகோணமலை, வவுனியா, கதிர்காமம், கண்டி, பண்டாரவளை, நுவரெலியா ஆகிய இடங்கள் உட்பட கொழும்பில் பல சமய சங்கங்களிலும் நாற்பதுக்கும் மேற்பட்ட சங்கீத உபந்நியாசங்கள் செய்தார். அமைச்சின் கேட்போர் கூடத்திலும் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷனிலும் தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற இவர் இளமையிலேயே முறையாக சங்கீதம் பயின்றவர். தனது ஏழாவது வயதிலேயே வடமொழி சுலோகங்களையும் இறை பாடல்களையும் பாடி மக்களைக் கவர்ந்தார். பெரியபுராணம், இராமாயணம், கந்தபுராணம், ஆழ்வார் பாசுரம், தேவிபாகவதம் போன்றவற்றை நன்கு ஆழ்ந்து பயின்றுள்ள இவரது சொற்பொழிவுகள் சிங்கப்பூர், மலேஷியா, போன்ற நாடுகளிலும் நிகழ்ந்துள்ளன.

'சத்கதா சுதாநந்தினி' 'ஹிந்து கலாமயீ', கதாரத்தினம், 'பன்மொழி அரசி' போன்ற பட்டங்கள் இவரது உபந்நியாசப்புலமையை நிரூபிக்கின்றன.

மே மாதம் 30ம் திகதி திருமதி சூடாமணி சடகோபனுக்கு இந்து கலாசார அமைச்சில் பாராட்டு இடம் பெற்றது. இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் பண முடிப்பு வழங்கி கௌரவித்தார். திருமதி விஜயலட்சுமி தேவராஜ், பொன்னாடை போர்த்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ஜூலை 16ம் திகதி, திருக்கோயில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய விடுதிக் கட்டிட அடிக்கல் நாட்டுவதற்கென இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் விஜயம் செய்திருந்தார். திருக்கோயிலில் அமைச்சர், அக்கரைப்பற்று காளிகோயில், ஆறுமுக சுவாமி ஆலயம், களுதாவளை பிள்ளையார் ஆலயம், தம்பிலுவில் சித்திவிநாயகர் ஆலயம், கண்ணகி அம்மன் ஆலயம், திருநாவுக்கரசு நாயனார் குருகுலம் ஆகிய பல இடங்களுக்கும் விஜயம் செய்தார். அமைச்சரின் விஜயத்துக்கான முன்னேற்பாடுகளை திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஜே. திவ்வியநாதன் மேற்கொண்டிருந்தார். இப் பிரதேசத்திற்கு பத்து ஆண்டுகளுக்குப் பின் ஒரு தமிழ் அமைச்சர் விஜயம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

★ ஜூலை 27ம் திகதி வவுனியா தமிழ் மகாவித்தியாலய ஐயாத்துரை மண்டபத்தில் சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டுவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இராஜாங்க அமைச்சர்கள், பி. பி. தேவராஜ், திருமதி இராஜமனோகரி புலேந்திரன் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர். வவுனியா மாவட்ட அரச அதிபர் திரு. தில்லை நடராஜா ஆசியுரை வழங்கினார். விழா நினைவாக ‘ உள்ளக்கமலம் ’ எனும் சிறப்பிதழும் வெளியிடப்பட்டது.

## ஆய்வியல் அறிஞர் பெ. சு. மணி இலங்கை விஜயம்

இந்துசமய, கலாசார இராஜாங்க அமைச்சின் அழைப்பின் பேரில் தமிழகத்தின் ஆய்வியல் அறிஞரான திரு. பெ. சு. மணி இலங்கையில் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதற்காக ஜூலை 29ம் திகதி வந்து சேர்ந்தார்.

திரு. மணி, பாரதியியல், இந்திய தேசிய விடுதலை இயக்கம், இராமகிருஷ்ண இயக்கம் என்பவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இவர் இருபதுக்கும் மேற்பட்ட ஆய்வியல் நூல்கள் எழுதியுள்ளார். இந்தியாவின் பலபாகங்களிலும் ஆய்வியல் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார்.

திரு. மணி அவர்கள் எழுதிய ‘ இராமகிருஷ்ணர் இயக்கமும், தமிழ்நாடும் எனும் நூலுக்கு தமிழக அரசு பரிசு கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர் இறுதியாக எழுதிய நூல் சுவாமி விபுலாநந்தர் பற்றியதாகும்.

அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தலைவராகவும், உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் மொழிபெயர்ப்புக் குழுவின் உறுப்பினராகவும், பாரதி நூற்றாண்டு விழாக்குழு உறுப்பினராகவும் திரு. மணி பல பதவிகளை வகித்துள்ளார்.

திரு. மணி அவர்களின் சொற்பொழிவுகள் கொழும்பிலும், கண்டி, கம்பளை, புசல்லாவை, நாவலப்பிட்டி, மாத்தளை பண்டாரவளைபோன்ற பல இடங்களிலும் நடைபெறவுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ஆலய வலம்

# முன்னேச்சரம்

★ இரா. மயில்வாகனம்

புராதன ஈழத்திருக் கோயில்களில் இதுவும் ஒன்றாகும். இலங்கையில் வடமேற்கு மாகாணத்தில் புத்தள மாவட்டத்திலே தென்னஞ் சோலைகள் சூழ்ந்த பிரதேசத்திலே அழகிய திருக்குளத்தோடு கூடிய சிவாலயம் முன்னேச்சரமாகும். இது வரலாற்றுக்கு அப்பாற்பட்ட காலத்திலே உண்டான ஈஸ்வரம் ஆதலால் முன்னீஸ்வரம் எனப் பெயர் பெறுவது. இதனை முன்னை நாத சுவாமி ஆலயம் எனவும் கூறுவர். இதன் முழுப் பெயர் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னைநாத சுவாமி ஆலயம் என்பதாம்.

இதை முனேசுவரம், முன்னேஸ்வரம், முன்னீஸ்வரம், முன் னீச்சரம் எனப் பலவாறு அழைப்பர். முனிவர்கள் வழிபட்டமையால் முனீசுவரம் எனப் பெயர் பெற்றதென்றும் கூறுவர். பெரு முனியாம் சிவபெருமானின் ஈசுவரம் என்பதனால் இப்பெயர் பெற்றதென்றும் கூறுவர். கோட்டையரசன் ஆறாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் ( 1412 - 1467 ) இது சிறப்பிக்கப்பட்டது.

முன்னேசுவரத்தில் எழுந்தருளி உள்ள இறைவனை முன்னை நாத சுவாமி எனவும், இறைவியை வடிவாம்பிகை எனவும் அழைப்பர். இத்தலத்திற்கு தீர்த்தம் மாய வனாறு ( தெதுறுஓயா ) ; தலவிருட்சம் அரசமரம்.

இத் திருக்கோயிற் கோபுரம் உயரமானது; அழகானது; அடுக்கடுக்காக அமைந்த அற்புத வேலைப்பாடுகளைக் கொண்டது. இலங்கையில் உள்ள எல்லா இனத்து மக்களும் இக்கோயில் பற்றுக் கொண்டவராவர். பழைய சிங்கள மன்னர் பலர் திருப்பணிவேலைகள் செய்துள்ளார்கள். குளக் கோட்டு மன்னன் முன்னேசுவரத்தினைப் புனருத்தாரணஞ் செய்து கும்பாபிஷேகம் செய்வித்ததாக முன்னேஸ்வர மான்மியம் கூறும்.

இராமபிரான் இராவணனைக் கொன்று மீண்ட போது அவரைப் பிரமகத்தி தோஷம் பின் தொடர்ந்தது. அவர் முன்னேசுவரத்தைச் சமீபித்த போது பிரமகத்தி விலகிப்போனது. அங்கே சோதிமயமான கோயிலைக் கண்ட இராமர் உள்ளம் உருகி அருகே உள்ள தீர்த்தத்தில் நீராடி இறைவனை வணங்கினார். இறைவன் திருக்குறிப் பறிந்து நாடெங்கும் சிவலிங்கங்களைத் தாபித்தார்.

முன்னீஸ்வரத்தில் முனிவர்களும் முடி மன்னர்களும் வழிபட்டுத் திருப்பணி செய்துள்ளார்கள். குளக்கோட்டு மன்

> நல்ல மனிதன் என்றும் மகிழ்ச்சியானவனாயிருக்கிறான். அவன் என்றும் கடவுளுடன் வசிக்கிறான். அவனுள் தெய்வீகம் பொலிகிறது. உங்களால் இயலும் எல்லா வகையிலும், உங்களால் இயலும் எல்லா மக்களுக்கும் என்றும் முழு ஆர்வம், ஆற்றல், அன்பு, கனிவு, முதலியவற்றுடன் உங்களால் இயலும் நன்மை அனைத்தையும் செய்குக.
>
> —சுவாமி சிவானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னன், ஆறாவது பராக்கிரமபாகு, பண்டித பராக்கிரமபாகு முதலானோர் செய்த திருப்பணி வேலைகளும் அவர்கள் உபகரித்த வரிசைகளும் கல் வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ளன.

சோழ நாட்டிலிருந்துகோயிற்பணி புரிவதற்காக பல்வேறு வகுப்பினரைக் கொண்டுவந்து 64 கிராமங்களாக்கப்பட்ட கோயிலுக்குரிய பூமியிலே அவர்களைக் குடியேற்றினான் என்று மான்மியம் கூறும்.

முன்னீஸ்வரத்தைப்போர்த்துக்கேயர் இடித்தபின் கண்டியரசன் ஸ்ரீ இராசசிங்கன் 1753ல் இக் கோயிலை அழகாகக் கட்டினான். ஆறாம் பராக்கிரமபாகு முன் இக் கோயிலுக்கு கொடுத்த மானியங்கள் பல. ஒன்பதாம் பராக்கிரமபாகுவும் (1506 – 1517) ஆண்டுக்காலக்கிடையில் பல கிராமங்களை சர்வமானியமாக வழங்கி செப்பேட்டினால் உறுதி செய்துள்ளான். போர்த்துக்கேயர் 1578ல் முன்னீஸ்வரத்தை அழித்து சூறையாடினர். அன்றியும் சின்னப்பருக்கு தேவாலயம்

## ஆதிசங்கரர்

கேரளத்தில் பூர்ணாநதி எனும் பெரியாறு பாயும் புண்ணியபூமி காலடி. அங்கு வேதநெறி தவறாது வாழ்ந்து வந்த பிராம்மணோத்தமர் சிவகுரு. இவருடைய உத்தமியானபத்தினி ஆர்யாம்பா – இவர்கள் குலம் தழைக்க, வையகம் துலங்க, வைதிகதர்மம் செழிக்க ஒரு சத் புத்திரனைப் பெற, விருஷாலமெனும் திருசிவப்பேரூர் (திருச்சூர்) திருத்தலத்தில் கோவில் கொண்டிருக்கும் பரமேசுவரன் சந்நிதியில் பிரார்த்தனைத் தவமாக 'பஜனசேவை' செய்து வந்தார்கள். தவசித்தியாக, பரமேஸ்வரனே அம்சாவதாரமாக அவர்களுக்குப் பிள்ளையாகப் பிறந்தார்.

நந்தன வருஷம், சித்திரை கடைசி அல்லது வைகாசி ஆரம்பம், சுக்லபட்ச பஞ்சமி, ஞாயிற்றுக்கிழமை, திருவாதிரையும் புனர்வசுவும் நெருங்கிய சுபயோக வேளையில் சங்கரர் பிறந்ததாகப் பழம் நூல்கள் கூறுகின்றன. வருஷத்தின் கணிப்புதான் பல கருத்துக்களுக்கு உட்பட்டது. பொதுவாக கி. பி. 788ல் பிறந்து 820ல் சமாதிநிலையில் பிரும்ம சாயுஜ்யமடைந்ததாகக் கருதப்படுகிறது.

வைதிக சனாதன தர்மத்திற்கு எதிராக 72 தான்தோன்றியான பிற மதங்கள் ஆதிசங்கரர் காலத்தில் பரவியிருந்தன. அவைகளைக் கண்டனம் செய்து வைதிக அத்வைத மதத்தை நிலைநாட்டிய தர்ம பரிபாலகர் ஸ்ரீ சங்கர பகவத் பாதர். பத்மபாதர், ஹஸ்தாமலகர், தோடகர், சுரேஸ்வரர்–இந் நான்கு பிரதான சீடர்கள் மூலம் வைதிகதர்மத்தையும், அத்வைத சித்தாந்தத்தையும் பாரததேசமெங்கும் நிலைபெற்றிருக்க மடங்களை நிறுவினார்.

பிரும்மசூத்திர பாஷ்யம் உபநிஷத் பாஷ்யங்கள், கீதாபாஷ்யம், விஷ்ணு சகஸ்ரநாமபாஷ்யம் முதலிய பதினெட்டு பாஷ்ய (விளக்கவுரை) நூல்களையும்; விவேகசூடாமணி முதலான இருபத்தி மூன்று சித்தாந்த கிரந்தங்களையும்; எழுபதுக்கும் அதிகமான ஸ்தோத்திர நூல்களையும் அமரவாணியான ஸம்ஸ்கிருத மொழியில் இயற்றித்தந்த ஞானவள்ளல்.

ஸ்ரீ சங்கர பகவத்பாதரின் புண்ணிய சரிதத்தைப் பல மகான்கள் எழுதி வைத்த சங்கர விஜயங்களும், சிவரஹஸ்யம் முதலான இதிகாச – புராணங்களும் விரிவாகப் போதிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தரங்க ஆத்மீக மூல உணர்வுகள்

குறியில்லாமல் அம்பு எய்தால் எய்த அம்பால் ஆபத்துக்களே விளையும். இவ்வாறானதுதான் ஒரு சிறந்த குறிக்கோள் இல்லாத வாழ்க்கையும். மனிதன் ஒரு சிறந்த இலட்சியத்துடன் வாழவேண்டும். அன்றாடக்கடமைகளை இலட்சியத்தில் பொருந்தும்வண்ணம் செய்து கடமைகளின்பலாபலனாகியஇன்ப, துன்பங்களை இலட்சியத்துக்காகச் சமர்ப்பணம் பண்ண வேண்டும். இவ்விதம் வாழுகின்றவன் சீரிய குறிக்கோளையடைந்த ஒரு பெருமகனுக்குரிய சுகத்தை அனுபவிக்கின்றான். ஞானம்— இதுதான் இலட்சியங்களில் சிறந்தது! ஜீவித தர்மங்கள், இந்த இலட்சியத்துடன் இணையாவிட்டால் வாழ்க்கையின் அச்சாணி உடையும். ஜீவாதாரத் தேவைகளில் தன்னிறைவு எய்தினாற்கூட மனிதன் அதில் திருப்திப்படுவதில்லை. அதற்கப்பால் ஒரு இருதய தாகம் இருக்கிறது. மனிதனுடைய மனவேட்கைக்கு முடிவு காணும் அந்தரங்க ஆத்மீக மூல உணர்வுகளை மனித சமுதாயம் புறக்கணிக்கும்போது நீர்வற்றி வரண்டு போன குளத்தை விட்டு நீர்ப்பறவைகள் பறந்து செல்வது போன்று அமைதியும், சுகமும் உலகத்தை விட்டுப் பறந்து செல்கின்றன.

— ஸ்ரீமத் சுவாமி கங்காதரானந்தா

அமைத்து தீவிரமாக மதப்பிரசார வேலைகளும் செய்தனர். ஸ்ரீ இராசசிங்கனே புனருத்தாரணம் செய்து குடமுழுக்கும் செய்து சிறப்பித்தான். இது 1753ம் ஆண்டில் என்பர். 1505ல் போர்த்துக்கேயர் வருவதற்கு முன்னர் அதாவது சிங்கள மன்னர் காலத்தில் மிக மிகச் சிறப்புற்றோங்கி இருந்தது.

இன்றைய அமைப்பையிட்டுப் பார்த்தால் முன்னேச்சரம் தமிழ்நாட்டின் ஆலயங்களைப்போல அமைந்துள்ளது. இங்கே நித்திய நைமித்திய பூசைகள் பெருஞ் சிறப்புடன் நடைபெறுவன. இவற்றைவிட இலட்சார்ச்சனை, நவராத்திரிவிழா மிகச் சிறப்பாக நடைபெறும். இக்காலங்களில் வெளியூரவர்களும் வந்து கூடி வடிவாம்பிகையின் அருளைப் பெறுவர்.

இங்கே ஆண்டுதோறும் நடைபெறும் விழாக்களில் சிவனடியார்விழா, பிச்சாடனர்விழா, நடேசர்விழா, வேட்டைத்திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத்திருவிழா மிகவும் அருமையானவை. இவ்வேளைகளில் இலட்சக்கணக்கான அடியார்கள் அங்கு கூடித்தரிசிப்பது வழக்கம்.

திருத்தொண்டர் என்றும் சிவனடியார் என்றும் அறுபத்து மூவர் என்றும் வணங்கப்பெறும் மெய்யடியார்களுக்குஅதியற்புதமாக திருவிழாவும் வழிபாடும் நடைபெறும். இப்படி நாயன்மார்களுக்கு திருவிழாவெடுக்கும் ஆலயம் இது ஒன்றுதான். அறுபத்து மூன்று நாயன் மாரும் தேரில் எழுந்தருளி வீதிவலம் வருதல் அற்புதக் காட்சியாகும்.

நித்திய நைமித்தியக் கிரியைகள் முறையாக நடைபெறும் முன்னேச்சரத்தின் மகோற்சவம் இருபத்தேழு நாள் நடைபெறும் ஆவணிமாதம் பௌர்ணமியன்று தீர்த்தோற்சவத்தை இறுதியாகக் கொண்டு அமையப் பெற்றது. சிவராத்திரி, நவராத்திரி, திருக்கார்த்திகை, திருவெம்பாவை, ஆருத்திரா, பிருமோத்சவம், இலட்சார்ச்சனை என்பன இவ்வாலயத்தின் சிறப்பு விழாக்களாகும்.

நவக்கிரகங்கள் என்னும் ஒன்பது கோள்கள் நமக்கு நன்மைகளைத்தருவன. தீமைகள் உண்டாகும் என்று சோதிடர்கள் கணித்துக் கூறும்போது பொது மக்கள் நலிவுறாவண்ணம் வழிபாட்டினால் கிரகங்களின் வேகத்தைத் தணித்துக் கொள்வர். கோள்களின் நலிவு தீர்வதற்காக இத்திருக் கோயிலில் நடைபெறும் விசேட அர்ச்சனைகள் வெகு உருக்கமானவை. அருளே உருவான அம்பிகையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணையை வேண்டி பதினொரு குருக்கள்மார் பகலிரவாக ஒரு லட்சம்முறை ஒரு நாளுக்கு அம்பிகையின் திருநாம மகிமையை ஓதுவார்கள். இப்படி 108 நாட்கள் தொடர்ந்து ஓதுதல் கோடி அர்ச்சனை என்று பெயர் பெறும். இயந்திர பூசையும் பத்துக் குருக்கள்மார் ஒரே நேரத்தில் காட்டும் பஞ்சாரத்தி தீபமும் பார்க்கப் பக்தியையும் பரவசத்தையும் ஊட்டுவன.

முன்னீஸ்வரத்தில் பல தீர்த்தங்கள் உள்ளன. அவை சிவதீர்த்தம், விநாயக தீர்த்தம், விஷ்ணுதீர்த்தம், சித்தாமிர்த தீர்த்தம், துர்க்கா தீர்த்தம், துவட்டா தீர்த்தம், வைரவ தீர்த்தம் முதலியன.

பக்தர்கள் நோய்நீக்கம், செல்வப்பேறு பிள்ளைப்பேறு, ஆயுள், ஆரோக்கியம், என்பன பெறுவதற்காக நேர்த்திவைத்து பூசை செய்து வழிபடுவார்கள்.

இத்தலத்தையிட்டுபலர் பிரபந்தங்கள் பாடியுள்ளார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குப் பின்னரே சில அருங்கலங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. கொக்குவில் சி. சிலம்புநாதபிள்ளை, நவாலி க. சோமசுந்தரப்புலவர், சிவஸ்ரீ சி. பாலசுப்பிரமணியக் குருக்கள் ஊஞ்சல், ஆசிரிய விருத்தம், பதிற்றுப்பத்தந்தாதி முதலியன அம்பாள் மீதும் முன்னீஸ்வரர் மேலும் பாடப்பட்டன.

காரைதீவு கா. சிவசிதம்பர ஐயர் முனீஸ்வர நவமாணிமாலையையும் பண்டிதர் மாணிக்க தியாகராசா ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னைநாதஸ்வாமி நவதுதியையும் பாடியுள்ளனர்.

முன்னை நாத சுவாமி நவதுதி:-

'வேண்டுவார்க் கிட்ட சித்திக ளருளும்
விண்ணவர் பணியு மெய்ப் பொருளே
யீண்டு போர்புரியுமிராவணன்றனை வீட்
டிராமமூர்த்தியை முனந்தொடர்ந்து
தீண்டு சீர்ப் பிரம கத்தியை விலக்கித்
தேங்குபே ரருள் மழை பொழிந்து
தூண்டுபேரொளியாய் விளங்குமா ரமுதே
சுகநிலை காட்டியாண்டருளே.

# குறள், தேவாரம், கீதை

## குறள்

அறத்தாற்றின் இல்வாழ்க்கை
ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவது எவன்?

இல்லறத்துக்குரிய இயல்புகளுடனே இல்வாழ்க்கை நடத்துபவன் ஆசைகளை அடக்கி வாழும் துறவிகள் எல்லோரினும் மேலானவனாவான்.

பாயிரயியல் – இல்வாழ்க்கை – 6

## தேவாரம்

கங்கையாடிலென் காவிரி யாடி
லென் கொங்கு தண்குமரித்
துறை யாடிலென் ஓங்கு மாகடல்
ஓதநீர் ஆடிலென் எங்கும் ஈசன்
எனாதவர்க் கில்லையே.

கங்கை, காவிரி என்னும் புண்ணிய நதிகளில் நீராடினாலென்ன, நறுமணமும் குளிர்ச்சியும் உள்ள குமரித்துறை, பெரிய அலைநீர்க்கடல் ஆகிய பிற புண்ணிய தீர்த்தங்களில் நீராடினாலென்ன ஒருவர் ஈசன் எங்கும் இருக்கின்றான் என்று கூறி அவ்வீசனை மெய்யன்புடன் வழிபடாவிட்டால் அவர்களுக்கு பாவநாசமாகிய நன்மையில்லை.

அப்பர் தேவாரம் - பாவநாசத் திருக்குறுந்தொகை.

## கீதா சுலோகம்

யோகயுக்தோ விசுத்தாத்மா
விஜிதாத்மா ஜிதேந்த்ரிய
ஸ்ர்வபூதாத்ம பூதாத்மா குர்
வன்னபி நலிப்யதே.

பக்தியுடன் செயல்களில் ஈடுபடும் தூய்மையான ஆத்மா, மனத்தையும் புலன்களையும் கட்டுப்படுத்தி எல்லோரிடமும் அன்பு கொண்டவனாகவும் எல்லோராலும் அன்பு கொள்ளப்படுபவனாகவும் ஆகின்றான். எப்போதுமே செயலில் ஈடுபட்டாலும் கூட, அத்தகு மனிதன் கட்டுப்படுவதில்லை.

(5ம் அத்தியாயம், பதம்– 7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி விநாயகர் சதுர்த்தி

★ இ. சூரியகலா (கலாசார அலுவலர்)

மற்ற தெய்வங்களுள் ஒருவராக கருதினாலும் மற்ற தெய்வங்களுக்கில்லாத ஒரு பெருஞ் சிறப்பைப் பெற்றதன் மூலம் மூத்தவராகவும் முன்னவராகவும், விக்கினங்களைத் தீர்ப்பவராகவும் திகழ்பவர் விநாயகரே. மக்களின் வேண்டுகோளுக்கு சுலபத்தில் செவி சாய்ப்பவராகக் கொண்டே இவரை எல்லாச்சருமங்களிலும் வழிபட்டு வருகின்றனர். எக்கருமத்தை ஆரம்பித்தாலும் துணைக்கு விநாயகரை அழைத்தால் அக்கருமம் வெற்றியாகும். ஏட்டிலும் கூட பிள்ளையார் சுழி, பாட்டிலும் பிள்ளையார் வணக்கம் முதலில். ஆகம பூஜையிலும் முதல் வழிபாடு இவருக்கே.

இந்து மக்கள் விநாயகர் விரதத்தை தவறாது அனுஷ்டித்துக் கொண்டிருக்கின்றனர். விநாயகர் பிறந்ததாகக் கருதப்படும் நாளே விநாயகர் சதுர்த்தி என அழைக்கப்படுகின்றது. பிரமன் கொட்டாவியில் உதித்த சிந்துரன் என்னும் அசுரனை அழிக்க, தாமே உமாதேவியின் வயிற்றில் கருவானார். அப்போது சிந்துரன் வாயுரூபமாகி கருவின் தலையைக் கிள்ளி எடுத்து விட்டான். தலையில்லாக்

## தர்மமும் அதர்மமும்

இராவணன் மூலமாக அதர்மம் தழைத்தபோதும், கம்சன் மூலமாக நல்லவை சீர்கேடடைந்தபோதும் பகவான் இராமாவதாரம் செய்ததாகவும், கிருஷ்ணாவதாரம் எடுத்ததாகவும் கேள்விப்படுகிறோம். ஆனால் ஒன்றை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இராவணனையும், கம்சனையும் சிருஷ்டி செய்தவர் யார்? அதுவும் அந்தப் பகவான்தானே? தர்மம் அதுவும் அந்தப் பகவான்தானே? தர்மம் எது என்றும், அதர்மம் எது என்றும் அவருக்குத் தெரியாதா? அந்த அதர்மம் வளர்ந்து விடாமல் அவர் செய்திருக்கலாமே? உலகத்தில் நன்மை எது என்பது தெரிய வேண்டும். தீமை என்றஇருட்டில் அது வெளிச்சமாகத் தெரியவேண்டும். அப்போது தான் விளக்கிற்கு மகிமை. அதைப்போலத் தீமை தலையெடுத்தால்தான் நன்மை புலப்படும். அப்போது நல்ல வழியைப் பின்பற்ற ஓர் ஆவலும் ஏற்படும். இதை நமக்கு எடுத்துக்காட்டி நம்மை முன்னேற்ற ஒருவர் தேவை என்று நினைப்போம். அதுதான் பகவானின் அவதாரம். அப்புறம் அவருடைய வாழ்க்கையே நமது நெறிமுறைகளுக்கு ஒரு முன்னோடியாக அமைந்துவிடும்.

அதர்மம் தலைதூக்கும் நேரமும், தர்மம் வெல்லவேண்டிய சமயமும் எது என்பது நமக்குத் தெரியாது. ஆனால் அது பகவானுக்குத் தெரியும். அப்போது அவர் அவதாரம் செய்வார். இப்போதும்கூட அவர் அவதாரம் செய்து நம்மிடையே இருக்கக்கூடும். உரிய நேரத்தில் அந்த அவதார நோக்கம் வெளிப்படும். அப்போது தர்மம் நிச்சயமாக வெல்லும்.

— ஜில்லெல்லமுடி அம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கை

வயதாகிவிட்டது என்ற உணர்வையும், அதனால் நம்மால் ஏதும் செய்யமுடிய வில்லை என்ற சோர்வையும் விட்டுத்தள்ளுங்கள். நடந்துபோனதை எண்ணி மன தில் சுமையாகக் கொண்டு வாழாதீர்கள். இருப்பது எதுவானாலும் அதை உற் சாகமாக எடுத்துக் கொள்ளுங்கள். எந்தக் காரியத்தையும் முயற்சி எடுத்துக் கொண்டு நன்றாகச் செய்ய முற்படுங்கள். அதில் கிடைக்கும் வெற்றியே உங்க ளுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் – பிறருக்கு உதவி மகிழ்ச்சியாக வாழ்வதுதான் சொர்க்கம்; பொறாமையால் மனம் புழுங்கி ஒடுங்குவதுதான் நரகம். நல்ல காரியங்கள், நல்லவர்களின் சேர்க்கை, நல்ல எண் ணங்கள் ஆகியவற்றில் ஈடுபடுங்கள். உங்கள் உள்ளத்துக்கு இவை 'டானிக்' போல உதவும்.

தவறையோ, தீயதையோ பார்க்கும்போது மனம்விட்டுப் போகாதீர்கள். தீயதிலும் ஓரளவு நன்மையைப் பார்க்க முடியும். நல்லவையும் தீயதாக மாறி விடாமல் நாம் கவனமாக இருக்க வேண்டும். நெருப்பில் எப்போதும் ஓரளவு புகை இருக்கத்தான் செய்யும். புகை இருக்கும்போது அதன் பின்னணியில் கொஞ்சம் நெருப்பாவது இருக்கும். உலகத்தை உங்கள் வழிக்குக் கொண்டுவர முயலாதீர் கள். உங்களை அதன் வழிக்கு அனுசரித்துக் கொண்டு வாழ்ந்து, மெல்ல மெல் லத் தீமைளைக் களைய முயலுங்கள்; வெற்றிபெறப் பாடுபடுங்கள். அந்த முனைப்பே உங்களுக்கு உற்சாகம் தரும். உங்கள் முயற்சி வீணாகவில்லை என்று உங்கள் மனச்சாட்சி உங்களைத் தட்டிக் கொடுக்கும். அந்த மனச்சாட்சிக்கு மதிப்பு கொடுங்கள். அது உங்களுக்குத் துணையாக நிற்கும்.

— பகவான் ஸ்ரீசத்யசாயிபாபா

குழந்தையை உமை பெற்று எடுத்தாள். சிவபக்தனான ''மயேச்சுரன்'' என்னும் அரசன் நாரதர் சாபம் பெற்று 'கயமுகன்' என்ற யானையாக காட்டில் திரிந்தான். கருவாயிருந்த உமையினைத் தாக்க மண்டபத்தை இடித்தான். அப்பொழுது சிவனின் சூலத்தில் சிரமரிந்து வீடுபேற டைந்தான். கஜமுகனின் தலையை, தலை யில்லாமல் பிறந்த உமையின் குழந்தைக் குப் பொருத்தியதால் அன்று முதல் ''கஜானனர்'' என்ற நாமத்துடன் விளங் கினார். கஜானனர் உதித்த நாளே ஆவ ணித் திங்களின் வளர்பிறையில் வருகின்ற சதுர்த்தி திதியுடன் கூடிய திருநாளாகும். இந்நாளே விநாயக சதுர்த்தி விரதமாக அனுட்டிக்கப்படுகிறது.

இனி இவ்விரதத்தை எவ்வாறு அனுட் டிப்பது என பார்ப்போம். ஆவணித் திங் களில் பூர்வ பக்கத்தில் வருகின்ற நான்கா வது நாளில் விநாயகர் சதுர்த்தி விரதத் தைத் தொடங்க வேண்டும். விரதத்தை தொடங்குபவர்கள், அதிகாலையில் எழுந்து நீராடிவிட்டு சித்த சுத்தியுடன் திருநீறு அணிந்து முறைப்படி மங்கள ஆரம்பமாக கடவுள் துதிசெய்து வணங்க வேண்டும். பின்னர் விநாயகர் திருவுரு வத்தை தூய இடத்தில் எடுக்கப்பட்ட களி மண்ணினால் செய்து நிறுத்த வேண்டும். பூஜையறையில் வைத்து புதிய வஸ்திரம் பூணூல் சாற்றி, விபூதி, சந்தனம், ஜவ் வாது, குங்குமம் இவற்றால் வெற்றி மகு டம் கரங்கள், துதிக்கை தந்தம் வயிறு, கால்கள், ஆசனம், மூஞ்சூறு ஆகியவற்றுக் குத் திலகம் இடவேண்டும். இருபுறமும் விளக்கு ஏற்றி வைப்பதுடன் விநாயகரின் அருகில் சிறு கைவிளக்கொன்றும் ஏற்றி வைக்க வேண்டும். பலவண்ண மலர்களால் மாலை கட்டிச் சாற்றுவதுடன் அறுகம் புல்லால் கட்டிய மாலையையும் போட வேண்டும். செம்பருத்திப் பூ, சங்குப்பூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றை வைப்பதோடு தாமரை மலரை விநாயகரின் காலடியிலும் வைக்க வேண்டும்.

மஞ்சள் பொடி, விபூதி, சந்தனம், குங்குமம், நல்லெண்ணெய், பால், தயிர், எலுமிச்சை ரசம், இளநீர், பஞ்சாமிர்தம் போன்றவற்றால் முறையே அபிஷேகம் செய்யவேண்டும். அபிஷேகம் முடிந்ததும் சுத்தமான தண்ணீர்விட்டும் செய்வதுடன் ஸ்லோக மந்திரம் தெரிந்தவர்கள் ஒவ்வொரு முறைக்கும் மந்திரம் சொல்லி செய்வது சிறப்பாகும். அதையடுத்து வன்னிதழை, வில்வம் மந்தாரை இலை போன்ற பச்சிலைகளுடன், அறுகம்புல்லையும் எடுத்து அட்சதை புஷ்பம், அறுகம் புல் போன்றவற்றால் தனித்தனியே உரிய மந்திரம் சொல்லி அர்ச்சனை செய்வித்தல் வேண்டும்.

தலையில் இருகைகளாலும் குட்டிக் கொண்டு காதுகளைப் பிடித்து மும்முறை தோப்புக்கரணம் போடவேண்டும். விநாயகர் அகவல், கவசக்கொத்து, விநாயகர் அநுபூதி போன்றவற்றையும் மனம் குளிர உள்ளன்புடன் வழிபடவேண்டும். இவ்விதம் பூஜை இயற்றிய பின்னர் மூன்று வாழை இலைகளை விநாயகரின் முன்பாக இடவேண்டும். அதில் பச்சரிசி, வெல்லம், அவல்பொரி, கடலை, சுண்டல், பிட்டு, அப்பம், வடை, பாயசம், பால், பழங்கள், திராட்சை, கரும்பு, மாதுளை, நாவற்பழம், தேங்காய், புஷ்பம், வெற்றிலை, பாக்கு முதலியவற்றுடன் விநாயகருக்குப் பிரியமான மோதகமும், கொழுக்கட்டையும் படைத்து ஆராதனை செய்ய வேண்டும்.

பின், மணி அடித்து சாம்பிராணி, ஊதுபத்தி, போன்ற தூபாராதனைகளுடன், கற்பூர தீப ஆராதனையும் செய்து நைவேத்தியம் பண்ணுவதுடன் இறுதியாக தியானத்தில் அமர்ந்து பிரார்த்தனை செய்ய வேண்டும். இவ்வாறு மறு திங்கள் சுக்கிலபட்ச சதுர்த்தி வரையில் (30 நாட்கள்) நாள் தோறும் செய்வதுடன் பகலில் மட்டும் ஒருவேளை உணவு உட்கொள்வதும் இரவில் பால் அல்லது பழம் மட்டும் புசித்திருந்து சதுர்த்தி விரதத்தைக் கடைப்பிடிப்பதும் உன்னதமான செயலாகும்.

மனிதன் சம்பாதிக்கும் செல்வம், அடையும் புகழ், தேடும் பதவி யாவுமே உலகியலில் மக்களால் பெரிதும் போற்றப்படுகின்றன. வெற்றி பெற்ற மனிதர் – சாதனையாளராகப் போற்றப்படுகின்றார். ஆனால் இது பிறர் மதிப்பிடுவதுதான். இதனை நாம் மெய்யானது என எண்ணிப் பின் பற்றவேண்டிய அவசியம் என்ன? உண்மையான ஆன்மீக ஞானமே நமக்கு நிறைவு தர முடியும். நமது ஆன்மீக முயற்சிகளுக்காக பிறர் பாராட்டு அவசியமில்லை. உலகின் மிகச்சிறந்த சிந்தனையாளர்கள் அனைவருமே சுய சோதனையில் ஈடுபட்டவர்கள்தாம். யாருடைய விமரிசனத்தையும் அவர்கள் பொருட்படுத்தவில்லை. இங்ஙனம் தம்மை நிலைநிறுத்திக் கொண்டவர்களையே உலகம் போற்றுகின்றது. அவர்களை மதிக்கத் தவறியவர்களை அல்ல.

— சுவாமி ஸ்மரணாநந்தா —
தலைவர், இராமகிருஷ்ண மடம்
சென்னை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமயப் போட்டி - 1992

★ என். சோமகாந்தன் (நிர்வாக அலுவலர்)

'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்பது அனுபவம் பெற்ற ஆன்றோர் வாக்கு.

இளமையிற் கல் என்பது கல்வியை மட்டும் குறிக்கவில்லை. அன்பு, அறம், இறைசிந்தனை, உண்மை பேசுதல், ஒழுக்கம், கடமையுணர்வு, முதலிய நற்பண்புகளும் இளமையிலேயே ஒருவரிடம் வேரூன்றி விட்டால் அப்பண்புகள் அவர் வளர்ந்து பெரியவராகிவிட்ட பின்னரும் அவரிடம் நிறைந்திருக்கும். எனவே கல்வியை, வித்தைகளை, நற்பண்புகளை, ஒழுக்கத்தை சற்க வேண்டிய பருவம் இளமைக்காலமே ஆகும்.

பல தனி மனிதர்களை அடக்கியதே சமுதாயம் என்பதனால் தனிமனிதர்கள் அறிவும், நற்பண்புகளும் கொண்டவர்களாக விளங்கும் பொழுது அத்தனி மனிதர்கள் சார்ந்த சமுதாயமே நற்பிரஜைகளைக் கொண்ட சமுதாயமாக உயர்வு பெற்று மிளிரும்.

'கல்விக்குப் பயன் அறிவும், அறிவுக்குப் பயன் ஒழுக்கமுமேயாகும்' எனக் கல்வியின் பயனைப்பற்றி சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த நாவலர்பெருமான் விளக்கியுரைத்துள்ளபோதிலும், இன்றைய கல்விக்கூடங்களில் பயிலும் மாணவர்கள் பரீட்சைகளில் சித்தியடைவதையே குறியாகக்கொண்டு பல்வேறு படிப்புத்துறைகளிலும் ஈடுபடவேண்டியிருக்கின்றது. பல்துறை அறிவைப் புகட்டுவதற்கு பாடசாலைப் பாடத்திட்டத்தில் இடமளிக்கப்படவேண்டியிருப்பதால் சமயக்கல்வியை ஒரு பாடமாகத்தான் பாடசாலைகளில் மாணவர்களால் பயில முடிகிறது. நற்பண்புகளை ஏற்படுத்தவல்ல சமயக்கல்வியை சமயச் சூழ்நிலையில் ஒரு மாணவன்பெறும் போது அவன் இறை உணர்வையும், பல நற்பண்புகளையும் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக்கு உரியவனாகின்றான். இறைவன் மீது பக்தியும், சிறந்த அறிவும் மிக்க ஒருவனால் வாழ்க்கையின் சவால்களை இலகுவில் சமாளித்து வெற்றி பெறவும் முடிகின்றதை சமயப்பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகள் மூலம் தெரிந்து கொள்ள முடியும்.

## மகாராஜபுரம் சந்தானம்

சாஸ்திரீய சங்கீத உலகின் மேதையாகத் திகழ்ந்த மகாராஜபுரம் சந்தானம் ஜூன் மாதம் 24ம் திகதி கார்விபத்தில் அகால மரணமானார்.

புகழ் பூத்த இசைப்பரம்பரையில் தோன்றிய சந்தானம், தமது இளமைப்பருவத்திலேயே தந்தையிடம் சங்கீதத்தைமுழுமையாகக் கற்று கச்சேரிகள் செய்தவர். 1960 முதல் 1965 வரை யாழ்ப்பாணம் பொன்னம்பலம் இராமநாதன் இசைக்கல்லூரியின் இசையியல் துறைத் தலைவராக சந்தானம் விளங்கினார்.

பத்மஸ்ரீ, சங்கீத கலாநிதி, கான கலாநிதி போன்ற விருதுகள் அவரது இசைத்திறமைக்குக் கிடைத்த கௌரவமாகும்.

அமெரிக்கா, கனடா, பிரிட்டன், மலேசியா. மற்றும் பல மேற்குநாடுகளிலும் இசைக்கச்சேரிகளை நடாத்திய அமரர் சந்தானம், ஆயிரக்கணக்கான இசைப்பிரியர்களின் அபிமானத்தை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திணைக்கள வெளியீடுகள்

★ அறநெறிப்பாடசாலை பாடத்திட்டம்

★★ சைவசமய சாரம்

★★★ பன்னிரு திருமுறைத்திரட்டு

ஆகிய மூன்று நூல்கள் அறநெறிப் பாடசாலைகளிற் பயிலும் மாணவர்களுக்காக வெளியிடப்பட்டன. இவை; முறையாக இயங்கும் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இலவசமாக விநியோகிக்கப்பட்டன.

● தமிழறிஞர் விபுலாநந்தர் வாழ்வும் பணிகளும்

இருபது பேரின் கட்டுரைகள் அடங்கிய இந்நூலில் சுவாமி விபுலாநந்தரின் வாழ்வு, பணிகள் என்பன பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. காத்திரமும், தரமும் மிக்க நூலாக இது விளங்குகின்றது.

விலை: ரூ. 125/-

பாடசாலைகளில் மாணவர்களுக்கு அளிக்கப்படும் சமயக்கல்விக்கு மேலதிகமாக சமயம் பற்றிய அறிவைப் புகட்ட வேண்டும் என்ற சீரிய நோக்கத்துடன் நமது நாட்டில் வார விடுமுறைகளிலும், பாடசாலை ஓய்வு நாட்களிலும் வணக்கத் தலங்களில் சமய சேவையாகக் கருதி சமய போதனை வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. நமது நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள இந்துசமய நிறுவனங்களும் அறநெறிப் பாடசாலைகளை நிறுவி அவற்றின் மூலமாக இவ்வகுப்புகளை நடத்தி வருகின்றன.

சமய ஞானத்தைப் பெறுவது மட்டுமல்லாமல், அறநெறிப்பாடசாலைகளில் பயிலும் மாணவர்கள் சரியைத்தொண்டினையும் மகிழ்ச்சிகரமாக விருப்பத்தோடு ஆலயங்களில் செய்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

நாட்டின் பல பகுதிகளிலும் இயங்குகின்ற அறநெறிப்பாடசாலைகளில் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் இதுவரை 225 அறநெறிப் பாடசாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு பதிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு இவ்வாண்டுவரை ஆண்டுதோறும் ஊக்குவிப்பு மானியமாக ஒரு தொகை வழங்கப்பட்டு வந்தது. இம்முறையை நீக்கி இனி அதற்குப் பதிலாக மேலும் பயனுள்ள வகையில் அங்கு பயிலும்மாணவர்களுக்குப் பயன் தரவல்ல சமய நூல்களை வழங்குவதுடன் இந்த அறநெறிப் பாடசாலைகள் சிறப்பாக இயங்குவதற்கான வழிமுறைகள், பாடத்திட்டம், அங்கு பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறிகளை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

போட்டிகள் மூலம் ஆற்றல்கள் வெளிப்படுவதுடன் மாணவரிடையே ஊக்கமும், ஏற்பட வாய்ப்பு ஏற்படுவதனால் அறநெறிப் பாடசாலைகளில் பயிலும் மாணவர்கள் பங்குகொள்ளும் இந்துசமயப் போட்டியை, இத்திணைக்களம் சென்ற சில ஆண்டுகளாக அனைத்து இலங்கை அடிப்படையிலும் நடத்தி வருகின்றது. முதல், இரண்டு, மூன்று ஆகிய இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகளும், பங்குபற்றும் மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை, பேச்சு, பண்ணிசை ஆகிய துறைகளில் இப்போட்டி நடத்தப்படுகின்றது. 10 முதல் 12 வயது வரையுள்ள மாணவர்கள் கீழ்ப்பிரிவிலும், 13 முதல் 15 வயதுள்ளவர்கள் மத்திய பிரிவிலும், 16 முதல் 18 வயதானவர்கள் மேற்பிரிவிலும் இப்போட்டியில் பங்குபற்றுவர். இம்முறை 6-9-92 (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறவுள்ள இந்துசமயப் போட்டியில் கலந்து கொள்வதற்கு சுமார் 3,000 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. அம்பாறை, இரத்தினபுரி, கண்டி, களுத்துறை, கம்பஹா, குருநாகல், கேகாலை, கொழும்பு, திருகோணமலை, நுவரெலியா, பதுளை, புத்தளம், மட்டக்களப்பு, மாத்தளை, மொனராகலை, வவுனியா, ஆகிய 16 மாவட்டங்களில் இப் போட்டிகள் ஒரே நாளில் நடத்தப்படவுள்ளன.

அறநெறிப் பாடசாலைகளின் வளர்ச்சி, அங்கு பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி, மாணவர்களின் அறிவு, ஆற்றல் இவற்றை எமது திணைக்களம் மதிப்பீடு செய்வதற்கு இப் போட்டி ஒரு சந்தர்ப்பமாக அமைகிறது.

## தத்துவங்களின் எளிமை !

கங்கை என்பது ஒரு ஜீவநதி. ஆனால் நாம் அதை அப்படி எடுத்துக் கொள்வதில்லை. அது பகவான் நாராயணனின் பாதத்திலிருந்து வந்தது என்கிறோம்; சிவபெருமானின் ஜடாமுடியிலிருந்து வெளிப்பட்டது என்றும் சொல்லுகிறோம். அதை மாதாவாக உருவகம் செய்து வழிபடுகிறோம். அதில் நீராடினால் பாவங்கள் எல்லாம் தொலைந்து போய்விடும் என்று கூறுகிறோம். இதனால் பல லட்சக்கணக்கான மக்கள் கங்கையில் நீராடி வழிபடுகிறார்கள். இதில் முக்கியமானது என்ன? கங்கையில் நீராடுவது அல்ல! அந்த நேரத்தில் மனதில் புனிதமான எண்ணங்கள் ஏற்பட வழி செய்கிறோமே அதுதான்! அதேபோல அந்த நேரத்தில், 'என் பாவமெல்லாம் தொலைந்துவிட்டது. இனி நான் புதிய மனிதன். இனிமேல் நான் பாவம் செய்யமாட்டேன்!' என்று நினைத்துக் கொள்ளுகிறோம் அல்லவா? அதிலிருந்து ஒரு சுயநம்பிக்கையையும் புதிய முயற்சிக்கான ஊக்கமும் தோன்றுகிறது அல்லவா? அதுதான் முக்கியம். இதை நம்மிடத்தில் ஏற்படுத்த முன்னோர்கள் கண்டுபிடித்த எளிய வழிதான் அவற்றுக்கு ஒவ்வொரு நம்பிக்கையையும், கதையையும் சேர்த்து வைத்திருப்பது.

எஜமானன் வேலையாளிடம் கைவிரலை உயர்த்தி, 'ஒரு கிளாஸ்!' என்று சொல்லி ஜாடை காட்டுகின்றான். அந்த ஆள் உடனே உள்ளே ஓடிப் போய் ஒரு கிளாஸ் தண்ணீர் கொண்டுவந்து கொடுக்கிறான். அல்லது காப்பி கொண்டு வந்து தருகிறான். எஜமானன் சாப்பிட்டபிறகு கிளாஸைத் திரும்ப எடுத்துக் கொண்டு போய் விடுகிறான். அதற்குப் பிறகு கிளாஸ் முக்கியம் இல்லை. அதைச் சாப்பிட்ட உணர்வு மிஞ்சுகிறதே, அதுதான் முக்கியம். அதைப்போல இந்த நம்பிக்கைகள், கதைகள் ஆகியவற்றை எல்லாம் மூடநம்பிக்கைகள் என்றும், கட்டுக்கதைகள் என்றும் அலசி ஆராய்ந்து களைந்தெறிய முற்பட வேண்டாம். அவற்றுக்குப் பின்னே உள்ள கருத்துகளை மட்டும் எடுத்துக்கொள்ளுங்கள். மற்றவை தண்ணீரோ, காப்பியோ குடித்தபிறகு பின்தங்கிய கிளாஸைப் போலப் பின்னுக்குப் போய்விடும். அவற்றைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை.

— சுவாமி சின்மயானந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் சிந்தனை

★ ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தா

# பிறவிப்பயன்

**கோபுரத்தின் இந்த இதழிலிருந்து 'வாழ்வியல் சிந்தனை' என்ற தொடரை ஆரம்பித்து வைக்கின்றோம். வாழ்வையும் சமயத்தையும் இணைக்கும் எண்ணங்களை அருளாளர்களும், சான்றோரும் தொடர்ந்து எழுதுவார்கள். இவ்விதழில், முதலாவது சிந்தனையை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தா அவர்கள் தொடக்கி வைக்கின்றார்.**

மனிதப் பிறவியின் மாண்பை இந்துசமயத்தைப் போன்று வேறு எந்த சமயமும் சிறப்பித்துக் கூறுவதில்லை.

ஒரு ஜீவன், தனது ஆளுமை வளர்ச்சியின் முழுமை அல்லது பூரணத்துவத்தை. இந்த மானிடப் பிறவியில்தான் அடைய முடியும் என்பது இந்து மதத்தின் உறுதியான கோட்பாடு.

மற்ற உயிரினங்களுக்குக் கிடைக்காத இத்தகைய ஒரு அரிய வாய்ப்பு மானிடனுக்கு மட்டுமே உண்டு.

மனிதனைத் தவிர மற்ற உயிரினங்கள், உடலால் கிடைக்கும் இன்பத்தோடு திருப்தியடைய வேண்டியதே.

ஆனால் மனிதன், தனக்கு மட்டும் அளிக்கப்பட்டுள்ள மனது, புத்தி இவைகளை வைத்து வாழ்க்கையின் மற்ற உயர் இன்பங்களையும், அனுபவங்களையும் பெறும் வாய்ப்பைப் பெற்றுள்ளான்.

எனவேதான் 'அரிது அரிது! மானிடராய்ப் பிறத்தல் அரிது!' என்றனர் நமது ஞானியர்.

எளிதில் கிடைக்காத இப்பிறவியைப் பெற்றும், அதன் சிறப்பை உணராது வாழ்க்கையை வீணடிப்போர்தான் எத்தனை பேர்! வாழ்க்கையிலே உயர வேண்டும் என்னும் ஆர்வம் சிறிதுமின்றி, நடைப்பிணங்களாக, விலங்குகளுக்கொப்ப வாழ்வதிலேதான் என்ன பயன்? அத்தகைய உயர் சிந்தனை, லட்சியம் அற்றவர்கள் துரதிருஷ்டசாலிகளே.

ஆகவே மானிடராய்ப் பிறத்தல் அரிதெனினும், உள்ளத்திலே உயர் சிந்தனைகளையும், பண்புகளையும் உடையவரை உயர்ந்தோர் என்று போற்றினர் நமது முன்னோர்.

இத்தகைய அரிய மனிதர்களுக்கு நல்ல வழிகாட்டி அல்லது ஆசான் அமைந்துவிட்டால் அவர்கள்தான் எவ்வளவு புண்ணியம் செய்தவர்கள்.

எனவே மூன்று விஷயங்களை அரிது என்றனர் நமது ஞானியர். ஒன்று மனிதனாய்ப் பிறத்தல்; அதைவிட அரிது உயர் சிந்தனையைப் பெற்றிருத்தல்; அதைவிட அரிது நல்ல ஆசானைப் பெறுதல் என்பது.

கிடைத்தற்கரிய இம்மானிடப் பிறவியை முற்றிலும் பயன்படுத்திக் கொண்ட ஞானியர், மனிதகுலத்தின் மணிவிளக்குகளாகத் திகழ்ந்தனர். மனித வளர்ச்சியின் முழுமையை எய்தியவர்கள் அவர்களே.

இத்தகைய ஒரு மகத்தான வளர்ச்சிக்கு வழிகோலுவதுதான் சமயத்தின் நோக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பாமரனைப் பண்புள்ளவனாக்கி, பண்புள்ளவனை தெய்வீகமானவனாக்குவதே சமயம்' என்பார் சுவாமி விவேகானந்தர்.

இறைவன் எல்லா ஜீவராசிகளுடைய உயிராக இருந்தாலும், அவனை அறிய மனிதன் ஒருவனுக்கு மட்டுமே சாத்தியம் என்பதால் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் அந்த உயர்ந்த நிலையை அடைய வேண்டும்; அதுதான் வாழ்க்கையின் உயர்ந்த லட்சியம் என்று சமயம் கூறுகிறது.

அந்த உயர்ந்த நிலையை அடைவதற்கான தகுதியை வளர்த்துக் கொள்ள உதவுவதே தர்மம் எனப்படுவது.

'தர்மோ ரக்ஷதி ரக்ஷித;', 'தர்மத்தைக் காப்பவனை தர்மம் காக்கும்' என்பது ஆன்றோர் வாக்கு.

மனிதன், பொருள் இன்பங்களை நாடுவதில் தவறில்லை. நான்கு புருஷார்த்தங்களில் பொருள், இன்பம் இரண்டும் இடம் பெறுகின்றன. ஆனால் அவை அதர்மத்தின் அடிப்படையில் அமைந்தால், அவையே மனிதனை மிருகத்திற்கும் கீழான நிலைக்குத் தள்ளிவிடும் என்பதால் தான் தர்மத்தை வாழ்க்கையின் அடிப்படையாக அமைத்தனர் நமது முன்னோர்.

தர்மத்தை வாழ்க்கையில் கடைப்பிடிக்கும்போதுதான் மனிதன் உண்மையான மனிதனாக வாழமுடியும்.

உண்மையான மனிதன் என்பதற்கு சுவாமி விவேகானந்தர் ஒரு நல்ல விளக்கத்தை அளிக்கிறார்.

'மிருக உணர்வுகளிலிருந்து விடுபடப் போராடுபவன்தான் மனிதன். அப்போராட்டத்தில் தோற்பவன் மிருகமாகிவிடுகின்றான்'; ஜெயிப்பவன் ஞானியாகிறான்என்பார்அவர்.

ஆகவே முதலில் மனிதன் மனிதனாகவேண்டும். பிறகுதான் தெய்வமாகலாம்.

'மனிதனை உருவாக்கும் சமயம் தேவை. மனிதனை உருவாக்கும் கல்வி தேவை' என்று சுவாமி விவேகானந்தர் அடிக்கடி கூறுவார். கல்வியைப்பற்றி மேலும் கூறும்பொழுது 'கல்வி என்பது மூளையில் சில விஷயங்களைத் திணிப்பதன்று. நமது கல்வி நமது வாழ்க்கையை நல்ல விதம் உருவாக்குவதாக, மனிதனை மனிதனாக உருவாக்குவதாக, பண்புகளை உருவாக்குவதாக, குறிக்கோள்களை நம்மிடம் உருவாக்குவதாக அமையவேண்டும். ஐந்து நல்ல உயர்ந்த கருத்துகளை அறிந்து கொண்டாலே போதும். அவற்றின் வழி உன் வாழ்க்கையை, உன் ஒழுக்கத்தை அமைத்துக் கொண்டால் நீயே நன்கு கற்றவனாகின்றாய். வெறும் செய்திகளைத் தருவது தான் கல்வியென்றால் நூல் நிலையங்களன்றோ முனிவர்களாகியிருக்கும்!' என்கிறார்.

அங்ஙனமே, சமயம் என்பது இறையனுபூதியாகும். தத்துவங்களும், சமய அனுஷ்டானங்களும் வழிபாட்டுத்தலங்களும் இறையனுபூதியைப் பெற உதவும் சாதனங்களே தவிர அவையே இறைவனாகிவிட முடியாது.

எனவே உயர் பண்புகளை வளர்த்து, தெய்வீக நிலைக்கு உயர்வதற்கான வழிமுறைகளை அறிதல் அவசியம்.

வாழ்க்கையில் உய்வதற்கு இந்து சமயம் மிக எளிய மார்க்கங்களை போதிக்கிறது.

'கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே'

வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் கடமை என்பதொன்று உண்டு. அதைத்தான் 'ஸ்வதர்மம்' என்று அழைக்கிறது கீதை.

'ஸ்வே ஸ்வே கர்மணி அபிரத: சம்சித்திம் லபதே நர:' 'ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளை சிரத்தையுடன் செய்து வெற்றி பெறலாம்' என்பது கீதையின் வாக்கு.

வாழ்க்கையில் மனிதனின் தொல்லைகளுக்கெல்லாம் காரணம்அவனது விருப்பு வெறுப்புகளே.

அத்தகைய விருப்பு வெறுப்புகளையெல்லாம் வெல்லுவதற்கான முதல் பயிற்சி, கடமைகளை முழு மனதுடன் செய்தல் ஆகும்.

அக்கடமைகளையும், பலன் எதிர்பாராது செய்தால் அதுவே யோகம் எனப்படுகிறது.

'காமவழிப்பட்டு காரியங்களைச் செய்பவன் முடிவில் எந்த சுகத்தையும் பெறுவதில்லை. எனவே சாத்திரம் கூறும் வழியில் சென்று மேன்மையடைவாய்' என அர்ஜுனன் வாயிலாக நம் அனைவருக்கும் போதிக்கிறார் பகவான்.

எனவே சமய வாழ்க்கையென்பது அனைவருக்கும் தேவையானது, பொதுவானதும் கூட.

அவரவர் தமக்குரிய கடமைகளை சிரத்தையுடன், பற்றின்றி ஆற்றுவதனால், மனது, விருப்பு வெறுப்புகளின் வழி செல்லாது. கிரமமாக அவற்றை வென்று அமைதி பெறுகிறது.

எனவேகிடைத்தற்கரியஇம்மானிடப் பிறவியைப் பெற்ற நாம் அதனை நல்லமுறையில்பயன்படுத்தி மேன்மையுறல் சாலச் சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பாணாழ்வார்

● மு. கடம்பநாதன்

திவ்விய பிரபந்தங்களைப் பாடியருளிய ஆழ்வார்கள், திருவரங்கப் பெருமானின் கடாட்சத்திற்கு உட்பட்டவர்கள். நெஞ்சம், நெக்குருகிப்பாடிய அவர்கள் இசையுடன் கலந்த இன்தமிழ்ப்பாக்களால் இறைவனையே உருகச் செய்தவர்கள். அங்ஙனம் பிரபந்தங்கள் பாடிப் போற்றிய ஆழ்வார்களுள் ஒருவரே திருப்பாணாழ்வார்.

சோழவள நாட்டில் உறையூர் என்னும் தலத்தில் தோன்றிய திருப்பாணாழ்வார், கழனியின் கண்ணே கவனிப்பாரற்றுக் கிடந்தார். அப்போது அவ்வழியாக வந்த ஒரு பாணர் குலத்தவனும் அவன் மனைவியும் தமக்கு குழந்தை இல்லாத குறையைப் போக்க எண்ணி, இக்குழந்தையை எடுத்துச் சென்றார்கள். குழந்தை பாணர் குலத்தில் வளர்ந்துவந்தமையினால், குலமரபுக்கேற்ப இசையில் தேர்ந்து விளங்கியது.

> நிவேதனம் என்றால் சுவாமியைச் சாப்பிடச்செய்வது என்பது பொருளல்ல. 'நிவேதயாமி' என்றால் அறிவிக்கிறேன் என்றுபொருள் ''பகவானே இந்தவேளைக்கு உன் கருணையால் எனக்கு உணவு கிடைத்திருக்கிறது. அதற்கு எனது நன்றி'' என அறிவித்து கடவுள் நினைவுடன் நன்றி உணர்வுடன் உண்ணவேண்டும். நமக்கு கிடைப்பது எல்லாமே பகவான் கொடுத்தது. அதை அவரிடமே காட்டி நன்றி சொல்லி அனுபவிப்பதில் என்ன தவறு?
>
> —பகவான் இராமகிருஷ்ணர்—

இளம் வயதிலேயே இசையிலும், வீணையிலும் சிறந்து விளங்கிய திருப்பாணாழ்வார், நாரத முனிவரைப்போல்ஞான வைராக்கியம் மிக்கவராகத் திகழ்ந்தார். ஒருநாள் இசைக்களை முதிர்ந்து பொலிந்த இவர்முன் தோன்றிய திருவரங்கநாதன், உடலில் திருவிலச்சனை இட்டு மறைந்தார். அன்றிலிருந்து இறைவனான, திருவரங்கப் பெருமானுக்கு தொண்டுசெய்யும் பணியில் ஈடுபட்டார். ஆயினும், தாம் பாணர் குலத்தில் வளர்ந்த காரணத்தினால், திருவரங்கத் திருப்பதியில் அடியெடுத்துவைக்கத் துணியவில்லை. எனவே காவிரியின் தென்கரையில் திருமுகத்துறைக்கு எதிராக நின்று யாழினை மார்பிற் தாங்கி நரம்பினை வருடி யாழிசையோடு மிடற்றொலியையும் இணைத்துப் பாடினார். இசை கேட்டு அனைவரும்உள்ளம்உருகினார்கள்.

இங்ஙனம் இவர் இசைப்பணி ஆற்றிவரும் காலத்தில் லோக சாரங்கர் என்ற முனிவர் பொற்குடத்துடன் பொன்னித்துறையை வந்தடைந்தார். வந்தவர், தான் தூய நீர் எடுக்கும் இடத்தில் நின்று

> ஓர் இயந்திரத்தை நிறுவும் போதே அது இன்னன்ன வேலைகளைச் செய்ய வேண்டும் என்று தீர்மானித்து அமைத்துவிடுகிறோம். அதை மாற்றிச்செய்ய இயந்திரத்துக்கு அதிகாரம் இல்லை. அதைப் போல் நாம் வந்துபிறக்கும் போதே நம்மால் இன்னன்ன நடக்க வேண்டும் என்பதை ஆண்டவன் தீர்மானித்து விடுகிறான். அதிலிருந்து நாம் மாறுபட முடியாது.
>
> —பகவான் ரமணர்—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைபாடிக் கொண்டிருந்த பாணரைப் பார்த்து அருவருப்போடு அகலுமாறு பலமுறை கேட்டும் பாணர் நகராமல் அங்கேயே நின்றார். எனவே பாணரை மூர்க்கராகக் கருதி அவரது யாழ்வாசிப்பை குழப்பும் நோக்குடன் பலவாறு கூறியும் அவர் அகலாமல் நின்றார். தொடர்ந்தும் இசைமீட்டிக் கொண்டிருந்தார்.

இசையிலே லயித்துப்போயிருந்த அவரைப் பார்த்து பலர் கானயோகி எனப் போற்றினர். சிலர் கற்களை எறிந்து வருத்தினர். அவர் வருந்துவதை உணர்ந்த அரங்கநாதன், அவருக்கு அருளத் திருவுளம் கொண்டார்.

முனிவராகிய சாரங்கரின் கனவில் தோன்றி "எமது பக்தராகிய பாணரை உமது தோளில் ஏற்றி எனது பக்கத்திற்கு வா" எனப் பணித்தார்.

இறைவன் கனவிற் கூறியதை ஏற்ற முனிவர், அதனை அனைவருக்கும் கூறியதோடு காவிரியின் துறையில் நீராடி, இசைபாடிக் கொண்டிருக்கும் ஆழ்வார் அருகில் வந்து இறைவன் இட்ட ஆணையைக் கூறினார். இதைக்கேட்ட பாணர் "புலைமகனான நான் திருவரங்கநகரை மிதிக்கத் தகுதியுடையேனா" என மறுக்க முனிவர் தமது தோள்களில் ஏறி வருமாறு கூறினார்.

அதைக்கேட்ட பாணர் நடுநடுங்கி, "மெய்த்தவ முனிவராகிய உமது தோள்களில் என்னைத் தாங்குவதா" என வினவினார். எனினும் முனிவரும் இறை ஆணையைநினைவூட்டி,ஆழ்வாரைத்தமது தோளில் ஏற்றி அழகிய மணவாளனின் திருமண்டபத்தில் இறக்கிவிட்டார். அப்போது பெருமாள் தமது மங்கள வடிவைக் காட்டியருளினார். இங்ஙனம் தாம்பெற்ற இறை அனுபவத்தை "அமலனாதிபிரான்" என்னும் பத்துப்பாட்டுடைய பிரபந்தத்தின் மூலம் உலகறியச் செய்தார் பாணர். இவர்தம் பாடல்களும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களிலே அடங்கியுள்ளன.

## சத்யஜித்ரே

புகழ்பெற்ற இந்திய திரைப்பட மேதையான சத்தியஜித்ரே "இந்தியாவை இந்தியருக்கும், உலகுக்கும் படம் பிடித்துக்காட்டிய" மாபெரும் கலைஞராவார்.

தமது கலைப்படைப்புகளின் வழியாக இந்திய சமூக வாழ்க்கையை ஊடுருவிப்பார்த்தவர் ரே. அவரது திரைப்படங்கள் அனைத்துமே தனித்துவம் நிறைந்தவையாக வெளிப்பட்டன.

திரைப்பட இயக்குநராக மட்டுமன்றி, சிறந்த படப்பிடிப்பாளராகவும், இசையமைப்பாளராகவும் திகழ்ந்தவர் ரே. தமது படங்களில் பண்டிட் ரவிசங்கர், உஸ்தாத் கான் போன்ற இசைமேதைகளையும் பயன் படுத்தினார்.

முப்பதுக்கும் மேற்பட்ட திரைப்படங்கள், விவரணப்படங்கள் என்பவற்றைஉருவாக்கிய ரே ஒவ்வொன்றிலும் தமது கலை முத்திரையை பதித்தார். அவற்றுள் பதேர் பாஞ்சாலி, அபராஜிதோ, சாருலதா, சட்கதி, நாயக், கனசத்ரு ஆகியன புகழ்பெற்ற படைப்புக்களாகும்.

சத்தியஜித்ரேயின் படங்களை உலகம் போற்றியதற்கு அடையாளமாக அவருக்கு திரையுலகின் உன்னத விருதான "ஒஸ்கார்" விருதுவழங்கப்பட்டது. அத்துடன் இந்தியாவின் அதியுயர் விருதான "பாரத ரத்னா" விருதும் அவருக்கு கிடைத்தது.

அண்மையில் அமரரான சத்யஜித்ரே நாடு, மொழி, பேதங்களுக்கு அப்பால் உலகத்தவரால் போற்றப்படும் கலைமேதை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்துசமய கலாசாரத் திணைக்களத்தின் திரைப்படவட்டம் ரேயின் மூன்று திரைப்படங்களை வீடியோ மூலம் திரையிட உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● ஆன்மீகக்கதை

# கருணையும் கடவுளும்

கருணைக்கும் ஈகைக்கும் தனிப் புகழ் பெற்றவர் பேரரசர் நந்திதேவர். இவர் கல்வியில் சிறந்தவர். மனப் பக்குவம் கொண்டவர், கடவுள் பக்தியில் திடமானவர்; நல்ல நெறிவழியில் வாழ்பவர். மன்னுயிர்களைத் தம் உயிர்போல் கருதும் சமநோக்குக் கொண்டவர்.

நந்திதேவரின் சிறந்த அரசாட்சியில் மக்கள் சுபிட்சம் நிறைந்து வாழ்ந்து வந்தார்கள். வறியவர் தனிகர் என்கிற பாகுபாடு அவரது அரசாட்சியில் நிலவவில்லை.

இப்படியிருந்த காலத்தில், ஒரு சமயம் நந்திதேவரின் நாட்டில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. ஆறு மாதகாலம் கஷ்டமில்லாமல் கழிந்தது. மக்களும் அரசாங்கமும் சேமித்து வைத்திருந்த உணவுப் பண்டங்களை எல்லாரும் பகிர்ந்து உண்டார்கள்.

பிறகு விலைகொடுத்து பக்கத்து நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை வரவழைக்கலானார்கள். மேலும் ஆறு மாதங்கள் இப்படியே சென்றன. பஞ்சம் தீர்ந்த பாடில்லை. மக்களிடமிருந்த செல்வம், விலைமதிப்புள்ள பண்டங்கள் யாவும் கரைந்து போயின. இந்த நிலையிலும் நந்திதேவர் சிறிதும் மனம் கலங்காமல் நாட்டு மக்களின் பசியைப் போக்கப் பாடுபட்டுக் கொண்டிருந்தார். அரசாங்கப் பொக்கிஷத்திலிருந்து செல்வங்களையெல்லாம் வாரிவழங்கினார். எவ்வளவு மாதங்கள்தான் சமாளிக்க முடியும்? அரசாங்க நிதி முழுவதும் தீர்ந்தது. கருவூலப் பெட்டகங்களில், சேமித்து வைத்திருந்த பொன் - மணி அணிவகைகளும் தானியப் பொதிகளைப் பெற விலைபோயின. எல்லாம் தீர்ந்தது. பஞ்சம் தீரவில்லை. இரண்டாவது வருடமும் இப்படியே கொடும் சோதனையாகக் கடந்து கொண்டிருந்தது.

நாட்டு மக்கள் வேறு நாடுகளுக்குக் குடியேறத் தொடங்கினார்கள். மாமன்னர் நந்திதேவரும் குடும்பத்துடன் அரண்மனையை விட்டுப் புறப்பட்டார். இப்போது அந்த அரண்மனைக்கும், வறியவனின் வெறும் குடிசைக்கும் உருவத்தில் தான் வித்தியாசம், விலை போகக்கூடிய ஒரு சிறு பொருள்கூட மாளிகையில் எஞ்சியிருக்கவில்லை. அடுத்த வேளை உணவுக்கு வழியில்லை என்ற நிலை ஏற்பட்ட பிறகே நந்திதேவர் நாட்டைத் துறக்க முன்வந்தார். முன்பே தம்மைச் சார்ந்துள்ள மந்திரி பிரதானிகளை மற்ற மற்ற நாடுகளுக்கு அனுப்பிவிட்டார். அன்றாடங் காய்ச்சியான நாடோடியைப் போல ராணியையும் ஒரே மகனையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார். அந்த நிலையில் அவர்களைப் பார்த்தால் எவரும் அடையாளம் கூடப் புரிந்து

> "என்னுடைய பக்தர்களுக்கும் எனக்கும் ஒரு கண்ணுக்குப் புலப்படாத டெலிபோன் இருக்கிறது. அது எங்களுக்கு மட்டுமே தெரியும். அவர்கள் மனம் உருகி அழைத்தால் அங்கேயே நான் உதவி செய்யப் போய்விடுவேன்."
>
> —ஸ்ரீசத்யசாயி பாபா—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள முடியாது. அவ்வளவு வறிய, பரிதாபகரமான தோற்றம்!

நந்திதேவரின் பனாதை நிலையைக் கண்ட மக்கள் கண்ணீர் வடித்தார்கள். 'நல்ல ஞானி; உதாரகுணம்' தான-தருமங்கள் செய்து பெரும் புகழ் பெற்றவர், இத்தகையவருக்கா இப்படியொரு சோதனை நிலை!...' என்று கூறி அங்கலாய்த்தார்கள்.

ஒருநாள் நந்திதேவர் குடும்பத்துடன் நகரத்து எல்லையில் ஒரு மரத்தடியில் சோர்ந்து அமர்ந்திருந்தார். அன்றோடு நாற்பத்தெட்டு நாட்கள் ஆகிவிட்டன. அந்தக் குடும்பம் உணவை ஒரு வேளைக்குக்கூட ஒழுங்காகப் புசித்துப் பசியாறியதுகிடையாது. காய்ந்த சருகு, கிழங்கு, காய்களுக்குக் கூட. வழியில்லை. நிலம் வறண்டு வற்கடம் வந்தபின், தண்ணீருக்கேதவிக்கும் போது, மற்றப் பொருள்களுக்குக் கேட்பானேன்?

அப்போது அவ்வழியாக வந்த ஒரு வெளியூர்க் குடும்பம், நந்திதேவரைப் பார்த்து பரிதாபத்துடன் இரக்கப்பட்டு, கொஞ்சம் உணவும் தண்ணீரும் கொடுத்துவிட்டுச் சென்றது. நந்திதேவரின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அவர் உணவில் பாதிப்பங்கை மனைவிக்கும் மைந்தனுக்கும் பகிர்ந்தளித்துவிட்டு, மீதத்தை வைத்துக் கொண்டு காத்திருந்தார். எவராவது பசியுடன் வருவார், அவருடன் பகிர்ந்து உணவை உட்கொள்ள வேண்டும் என்கிற விருப்பம் அவருக்கு. வெகுநேரம் காத்திருந்தார்.

நல்ல காலம்; ஓர் அந்தணர் பசியுடன் வந்து சேர்ந்தார். நந்திதேவர் அவரைப் பரிவுடன் வரவேற்றுத் தம்மிடமிருந்த உணவில் பாதியை அவருக்குக் கொடுத்தார். அவர் ஆவலுடன் புசிப்பதைத் திருப்தியுடன் பார்த்து மகிழ்ந்தார் நந்திதேவர்.

அப்போது மற்றொரு வழிப்போக்கன் பசியுடன் வந்து சேர்ந்தான். சாப்பிடத் தொடங்க இருந்த நந்திதேவர் சிறிதும் மனக்கலக்கம் இல்லாமல், வழிப்போக்கனை வரவேற்றார். தம்பங்கு உணவை அவனுக்கு உவந்து அளித்தார். அவன் பசியாறி, நந்திதேவரை வாழ்த்தினான். இப்பெருமிதத்தில் நந்திதேவருக்குப் பசிப்பிணி கூட வருத்தவில்லை. எஞ்சியிருந்த தண்ணீரைத் திருப்தியுடன் பருக ஆரம்பித்தார்.

## லண்டனில், தமிழ் சிங்கள இலக்கியத்தொகுதி

உலகப்பிரசித்தி பெற்ற லண்டன் பென்குவின் பிரசுரத்தார், இலங்கை தமிழ், சிங்கள, ஆங்கிலப் படைப்பாளிகளின் இலக்கியத் தொகுதி ஒன்றை வெளியிட்டுள்ளனர். 245 பக்கங்கள் கொண்ட இந்தத் தொகுதியை பேராசிரியர் டி. சி. ஆர். ஏ. குணதிலகா தொகுத்துள்ளார்.

இலங்கையில் பென்குவின் ஆக்கங்கள் என்ற தலைப்பில் முழுவதும் இலங்கைப் படைப்பாளிகள் சிலரின் ஆக்கங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. பல சிங்கள, ஆங்கிலப் படைப்பாளிகளுடன் அமெரிக்க நிலைய நூலகப் பிரிவின் இயக்குனர் பி. தம்பிராஜா எழுதிய 'தலைக்கொள்ளி' (இல்லஸ்ற்ரேட்டட் வீக்லியில் வெளியானது), சதானந்தன் எழுதிய 'விமலா', டாக்டர் நந்தி எழுதிய 'படிகம்' என். எஸ். எம். இராமையா எழுதிய 'மலைகளுக்கு மத்தியில்' ஆகிய கதைகளும், மஹாகவி, முருகையன், சில்லையூர் செல்வராஜன், குறிஞ்சிநாதன் ஆகியோரது கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஐயா சாமி! தாகம் நெஞ்சை வறட்டுகிறதே. கொஞ்சம் தண்ணீர் கொடுங்க ஐயா! புண்ணியவானே! தயவு காட்டுங்க ஐயா!'

நந்திதேவர் நிமிர்ந்து பார்த்தார். சற்றுத் தொலைவில் அனாதைக் கோலத்தில் ஒரு மனிதன் பரிதாபமாக நின்று கொண்டிருந்தான். தீண்டப்படாதவன்; கூசிக்குறுகி ஒதுங்கி நின்றான் நந்திதேவர் அவனைக் கருணையுடன் பார்த்தார். அவன் உருவத்திலும் எங்கும் பரந்துள்ள பரம்பொருளையே தரிசித்தார். அவருடைய பண்பு அது.

தண்ணீர்ப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு, அந்த எளியவனிடம் விரைந்தார். அவனை ஆதரவுடன் அணைத்துக் கொண்டு, 'இந்தா இந்த நீரைப் பருகித் தாகத்தைப் போக்கிக்கொள். சற்று முன்பே வந்திருந்தால், உன் பசியையும் சிறிதளவு போக்கியிருப்பேன். எனக்கு அதிர்ஸ்டம் இல்லை, உன் பசிப்பிணியைப் போக்க' என்றார் நந்திதேவர்.

### துளசி

வீட்டில் துளசி மாடம் வைத்து துளசி வளர்ப்பது பல வகைகளிலும் நன்மைதரும். வீட்டில் மங்களகரமான நிகழ்ச்சிகள் நிறைய ஏற்படும். வியாதிகள் குறையும். மனதும் உடலும் நலமாக இருக்கும். துளசியைத் தினமும் பூஜித்து வந்தால் புண்ணிய பலன்கள் நிறைய ஏற்படும். கோயில்களில் துளசிச் செடிகளை வளர்த்தால் திருக்கோயில் கட்டிய புண்ணியம் ஏற்படும். துளசிதளம் இல்லாமல் விஷ்ணு பூஜை நிறைவு பெறாது. துளசி வெறும் தாவரமல்ல. அரிய சக்திகள் நிறைந்த தெய்வீக ஔஷதம் ஒவ்வொரு இந்து இல்லத்திலும் துளசிச் செடிகளை வளர்ப்பது ஆரோக்கியம் தரும்.

தாகம் தீர்ந்தது. மனமகிழ்வுடன் நந்திதேவரை வாழ்த்தினான் அந்த மனிதன். நந்திதேவர் இதுவரையில் எவ்வளவோ தான் தருமங்கள் செய்திருக்கிறார். ஆனால் இன்று அவருக்கு ஏற்பட்டதைப் போன்ற மன நிறைவும் பெருமகிழ்வும் என்றும் ஏற்பட்டதில்லை.

அப்போது, அங்கிருந்த மூன்று விருந்தினரும் மாயமாய் மறைந்தார்கள். பிரும்மா, விஷ்ணு, சிவன் மூவரும் அங்கே காட்சி அளித்தார்கள். அகம் மகிழ்ந்த நந்திதேவர் சென்னி சாய்த்து வணங்கினார்.

செயலும் பயனும் போல், கருணையும் கடவுளும் இணைந்திருப்பதை எடுத்துக் காட்டுவதாக, படைப்புக் கடவுளின் அருள் வாக்கு கம்பீரமாக ஒலித்தது.

'நந்திதேவரே! உமது புகழ் என்றென்றும் நிலைத்திருக்கும். கருணைக்கு உமது சரிதத்தையே பார்மரர் பண்டிதர் யாவரும் எடுத்துக்காட்டுவார்கள். உமக்கு வேண்டிய வரம் என்ன?'

'பரம்பொருளே! இவ்வுலகச் செல்வமெல்லாம் அழியும் செல்வம். எனக்கு அவைகளில் சிறிதும் பற்றுதல் கிடையாது. இக்கருணை உள்ளமும் கடவுள் பக்தியுமே அழியாச் செல்வங்கள். இவைகளை நான் எல்லாப் பிறவிகளிலும் குறையாது பெறவேண்டுகிறேன். என் நாட்டில் பஞ்சம் விலகி நாட்டு மக்கள் முன்போல் சுபிட்சமாக வாழவும் அருள் புரியுங்கள்' என்று வேண்டினார் நந்திதேவர்.

அவர் கோரிக்கைபலித்தது.

தொகுப்பு:- குமார் வடிவேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கி. இராஜநாராயணன் பற்றி !

இந்தியாவின் சொந்தப் பிள்ளையாகிய கிராமத்து மக்களைப் பலர் மறந்து போனார்கள். சுதந்திரம் பெற்று விட்டால் இந்தியா சொர்க்க பூமியாகிப் போகும் என்ற கற்பனையில் மிதந்து கொண்டு சொல்லொணாத் துயரங்களுக்குத் தங்களை ஆட்படுத்திக் கொண்ட ஊர் பெயர் தெரியாத எத்தனையோ அப்பாவிகளின் பிரதிநிதிகளாகிய தூங்கா நாயக்கரைக் கதாநாயகனைக் கொண்டு கதை புனைய வேண்டும், அல்லது இயலும் என்ற நினைப்பே இல்லாமல், பட்டணத்துப் படாடோபங்களையும் உயர் மட்டத்தாரின் உள்மன உளைச்சல்களையும் கருவாகக் கொண்டு கதைத்துத் திரிந்த சந்தைக்கடையில் சந்தடி இல்லாமல் ஒரு பெரிய எழுத்துலகப்புரட்சிக்கு வித்திட்டு வளர்த்து வருகின்றார் கி. ராஜநாராயணன்.

அறுபது வயதிலும் இவ்வுலகத்தை ஐந்து வயதுக் குழந்தையின் ஆர்வத்தோடு பார்த்து அனுபவிப்பதோடு, தன் எழுத்துக்குள் அடைத்துப்போட்டுப் பிறரையும் அனுபவிக்கச் செய்யும் கலை கைவந்த அருமைப் படைப்பாளி அவர்.

சங்க இலக்கியங்களுக்குப் பிறகு தன்மை நவிற்சி செத்துப்போனதோ என்று கருதும் அளவுக்கு வளர்ந்துவிட்ட கலைப் பூதாகாரங்களைக் கைவிட்டு இயற்கையான எழுத்து எழுதும் கலைக்காகத் தவமிருந்து தன்னைத் தயார்படுத்திக் கொண்டவர் கி. ரா. எத்தனையோ எழுத்தாளர்கள் ஏங்கிக் கிடந்தும் எளிதில் பெறமுடியாத சிறுகதையின் உருவச் செம்மையைத் தம் அயரா உழைப்பாலும் ஆழ்ந்த சிந்தனையாலும் கையகப்படுத்திக் கொண்ட சிறப்பைப் பெற்றவர் கி. ராஜநாராயணன். வாழ்க்கையைக் கூர்ந்து கவனித்து அதன் மூலை - முடுக்குகளில் எல்லாம் ஒளிந்துகொண்டிருக்கும், ஒளிர்ந்துகொண்டிருக்கும் கொள்ளை அழகுகளை வெளிச்சம் போட்டுக் காட்டுவதில் வல்லவர் கி. ரா. கடந்த அரை நூற்றாண்டுகாலத்தில் தமிழகத்தில் வேர் விட்டுத் தலையெடுத்து நிற்கும் சிறுகதைத் துறையில் எத்தனை பரிசோதனைகளைச் செய்துபார்க்க முடியுமோ அத்தனையையும் செய்து பார்க்கிறார் கி. ரா.

படைப்பாளிகள் பலரும் தம் பாத்திரங்களின் மீது தாம் ஏறிச் சவாரி செய்துகொண்டு எல்லாப் பாத்திரங்களின் வாயிலாகவும் தாமே பேசியும், எல்லாப் பாத்திரங்களும் தாமேயாகிச் சிந்தித்தும் வருவதே நியதியாகிப் போய்விட்ட தமிழ் எழுத்துலகில், பாமர மனிதனின் சிந்தனை ஓட்டத்தை வயப்படுத்திக் கொண்டு 'அவனே தானே' ஆகி உலகத்தை அவனது கண்ணால் கண்டு அவனது அறிவால் அளந்து அவனது மதிப்பீடுகளால் எடை போட்டு ஒரு தனிஉலகையே படைத்துக் காட்டும் இந்த அற்புதச் சாதனையில் வெற்றியை எட்டிக்கொண்டிருப்பவர் கி. ரா.

*( ராஜநாராயணீயம் எனும் நூலின் அணிந்துரையில், காரைக்குடி அழகப்பா பல் கலைக்கழகப் பேராசிரியர் கோ. சங்கரராசுலு )*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு

★ ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் ★

உலகத்தில் நாம் காண்கிற அன்பை மூன்று வகையாகப் பிரிக்கலாம். மகான்கள், யோக்கியர்கள், சத்தியசந்தர்கள், பரோபகாரிகள், ஞானிகள், அநுக்கிரக சக்திவாய்ந்த உத்தமர்கள் ஆகியோரிடம் அவர்களது குணத்துக்காக அன்பு ஏற்படுகிறது. பந்துக்களுடனும் சிநேகிதர்களுடனும் சேர்ந்து பழகுவதால் அவர்களிடம் ஒருவித அன்பு உண்டாகிறது. மூன்றாவது, ஒரு காரியத்துக்காக, லாபத்துக்காகச் சிலரிடம் அன்பு வைக்கிறோம். உதாரணமாக வியாபாரத்தில் சகாயம் செய்வார் என்பதற்காக ஒரு தனிகரிடம் அன்பு பாராட்டுகிறோம். சம்பளம் கொடுக்கிறார் என்பதால் யஜமானரிடம் அன்பாக இருக்கிறோம்.

இந்த மூவகை அன்பும் உண்மையானதல்ல; சாசுவதமானதல்ல. யஜமானர், ''நீ போய்விடு'' என்றால் உடனேயே நம் அன்பும் போய்விடும். பழகினவர்கள் தூர தேசம் போனாலோ, காலகதி அடைந்தாலோ, வேறு விதத்தில் அவர்களுடன் பழக்கம் போய்விட்டாலோ நாளடைவில் அன்பும் போய் விடுகிறது. முதலில் பிரிவின்போது அழுத அழுகை அப்புறம் எப்படியோ மறைந்து விடுகிறது. உண்மையான அன்பானால், அந்த அழுகை என்றைக்கும் அப்படியேதானே இருக்க வேண்டும்? உத்தம புருஷர்களான மகான்களிடம் வைக்கும் அன்புகூட நிரந்தரமில்லைதான். மகானிடம் உத்தமகுணம் குறைந்தால்—அல்லது குறைந்ததாக நமக்குத் தோன்றினாலே போதும் — அவரிடம் வைத்த அன்பும் குறைந்து விடுகிறது.

மூவகை அன்பும் காரணத்தால் ஏற்பட்டது. எனவேதான் அவை நிரந்தரமாக இருக்கவில்லை. உத்தம புருஷர்களிடமும் இன்ன குணம் இருக்கிறது என்பதால், அந்தக் குணத்தைக் காரணமாகக் கொண்டே அன்பு வைக்கிறோம். அதோடு அவர்கள் நம்மை உத்தாரணம் செய்வார்கள் (உய்விப்பார்கள்) என்ற சுயகாரியமும் உள்ளூர இருக்கவே செய்யும்.

இப்படியெல்லாம் எக்காரணமும் வியாஜமும் இன்றி பிரியமாக இருப்பதுதான் உண்மை அன்பு. ஒருவர் நம்மிடம் நெருங்கிப் பழகாவிட்டாலும் சரி, அவருக்கு ஆத்ம குணங்களும் அநுக்கிரக சக்தியும் இல்லாவிட்டாலும் சரி, அவரால்

---

நமக்குள்ளேயே இருக்கும் ஆனந்தமே நிலையானது. வெளியே நாம் ஆசையுடன் தேடும் ஆடம்பர வாழ்க்கையும், சுகங்களும் நம்மை ஏமாற்றித் துன்பம் தரக்கூடியவை.

'உன்னையே நீ உணர்ந்தால் இறைவன் உன்னிடம் இருப்பதைத் தெரிந்து கொள்வாய்' அதைவிட மிசப்பெரிய பாக்கியம் உலகத்தில் வேறெதுவும் கிடையாது. இந்த எண்ணத்தை ஏற்று உங்கள் வேலைகளுக்கு நடுவிலும் கூட இந்த உணர்வை தேடிப் பிடிக்க முயலுங்கள். அப்போது நிலையான ஆனந்தம் உங்களை வந்தடையும். ஆண்டியாக இருந்தாலும், அரசனாக இருப்பினும் அந்த உணர்வைப் பெறுவதே வாழ்க்கையின் இலக்கும் வெற்றியுமாகும்.

— சுவாமி முக்தானந்தா —

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு எந்தக்காரியமும் ஆகாவிட்டாலும் சரி—அப்போதும் நாம் அவரிடம் மாறாத அன்பு வைத்தால் அதுவே உண்மையான அன்பு.

அப்படிப்பட்ட அன்பு யாருக்காவது இருக்கிறதா? ஒரே ஒருவருக்கு இருக்கிறது. ஸ்வாமிதான் அந்த ஒரே ஒருவர்.

ஸ்வாமிக்கு நம்மிடம் இருக்கும் அன்புக்கு ஒரு காரணமும் இல்லை. காரணத்தை அவர் பாராட்டுவதாக இருந்தால் நமக்கு ஒருவேளை சோறுகூடப் போடமாட்டார்! நம் பிழைகளையெல்லாம் பொறுத்துக் கொண்டு, நம்மை இந்த மட்டும் காப்பாற்றுபவர் அன்புமயமான பரமேசுவரனே. இந்தப் பரமசிவ அன்பின் திரிபே உலகில் காணும் மூன்று வகை அன்புகளும்.

அந்தக் காரணமற்ற பரமசிவ அன்பை நாமும் அப்பியசிக்க வேண்டும். தப்புச் செய்பவன் என்று காரணம் பார்த்து நாம் ஏன் ஒருவனை வெறுக்க வேண்டும்? நாமே தப்புச்செய்கிறோமே, அப்போது நம்மை நாமே உதறித் தள்ளுகிறோமா? அப்படியே மற்றவர்களிடத்திலும் இருக்க வேண்டும். மகா பெரியவர்களிடத்தில் அன்பு இருப்பது விசேஷம் இல்லை. மகா பாவியிடமும் அதே அன்பு இருக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால் அவனிடமே அதிக அன்பு வைக்கவேண்டும். ''நாம் தப்புச் செய்வதுபோலவே இவனும் செய்கிறான். இவன் மனம் இவனை இப்படித் தூண்டுகிறது. அந்த மனத்தை நல்ல தாக்க முயற்சிபண்ணுவோம்'' என்று நினைக்க வேண்டும். ஈசுவர கிருபையால் அநுக்கிரக சக்தி பெற்றிருப்பவர்கள், அதைக் கொண்டு பாபியிடம் உள்ள பாபங்களை நிவிருத்தி பண்ணுவதையே முக்கியமாகக் கொள்ளவேண்டும்.

ஆரம்பத்தில் ஒரே ஒரு மனிதரிடம் காரணமில்லாத தூய அன்பை வைக்கப் பழகிவிட்டால் பின்னால் அதுவே நம்மை அன்புமயமாக்கி, அந்த அன்பை எல்லோரிடமும் பரப்ப உதவி புரியும். குருவிடம் இவ்விதம் பயன் எதிர்பாராமல் பூரண அன்புவைக்கப் பழகவேண்டும் என்பது பெரியோர்கள் ஏற்படுத்தியுள்ள விதி, குருவிடம் காரணம் பார்க்காமல், வியாஜம் இல்லாமல் அன்பு செலுத்த ஆரம்பிக்க வேண்டும். பின்பு அந்த அன்புதருகிற ஆனந்தத்தில் பழகிப்பழகி உலகம் முழுவதும் குருவாக நினைத்து, சமஸ்தப் பிராணிகளிடமும் காரணமில்லாத சமமான அன்பு செலுத்த வேண்டும். உலகம் முழுவதும் அன்பை நிரப்பினால் அதுவே ஆனந்த நிலை, அதுவே பரிபூர்ணநிலை; அதுவே பரம சாந்தி.

நன்றி—தெய்வத்தின் குரல்
பாகம்—1.

## காயத்திரி மகிமை

நல்ல சமுதாயம் கல்வியைப் பொதுவுடைமை ஆக்குகிறது. ஆனால் நல்லறிவு படைத்தவர்கள் மட்டுமே அதைப்பயன் படுத்திக் கொண்டு உயர்வு பெறுகிறார்கள் அதே விதத்தில் பரமார்த்திகப் பெருவாழ்வை மக்கள்பெற வழி செய்ய வேண்டும். பின்பு அவரவர் பரிபாகத்திற்கு ஏற்ப அவர்கள் அதன் நன்மையைப் பெற முடியும். பரமார்த்திகப் பெருவாழ்வை உறுதிப்படுத்துவதற்கு அமைந்துள்ள மந்திரங்களுள் காயத்ரீ மந்திரம் தலைசிறந்தது. அதை ஓதவும் உணரவும் எல்லோரையும் தூண்டுவது சான்றோர் செயல்.

—சுவாமி சித்பவானந்தர்—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம் போல் வாழ்வு

திருமுருக கிருபானந்த வாரியார்

ஒரு நகரில் சந்தனக்கட்டை விற்கும் வியாபாரி ஒருவன் இருந்தான். அவன் பெரும் தனவந்தன்.

மாலை நேரத்தில் அந்த நகரையாளும் மன்னவன் தன் மணித்தேரின்மீது கடைவீதி வழியே சென்று நகரவெளியில் போய் உலாவிவிட்டு மறுபடியும் தேரேறி அரண்மனை சேருவான்.

அங்ஙனம் செல்லும்போது, சந்தனக் கட்டை வியாபாரி கடையை விட்டிறங்கி நின்று மன்னவனைக் கரம்கூப்பித் தொழுவான். மன்னனும் கைகுவித்துக் கும்பிடுவான் இப்படி நாள்தோறும் நிகழும்.

ஒரு நாள் மன்னன் வழக்கம்போல் சென்றான். சந்தனக்கட்டை வியாபாரி

> இந்துமதம் ஒரு விலைமதிப்பிட முடியாது சுரங்கம். பொன்னும் மணியும் அதில் அள்ள அள்ள குறையாமல் கொட்டிக் கிடக்கின்றன. ஆனால் அந்தப் பொதி சுமப்பதைப் போலச் சிலர் மட்டும் சுமந்து கொண்டுநிற்பதில்பயனில்லை. அதன் அருமை ஏழை, எளிய மக்களுக்கு– பாமரர்களுக்கு தெரியும்படி செய்ய வேண்டும். அதுதான் நமது பெருமை மிகுந்த மதத்துக்கு நாம் ஆற்ற வேண்டிய மிக முக்கியமான தொண்டு.
>
> — புலவர் கீரன் —

எழுந்து நின்று வணங்கினான். மன்னனுக்கு அன்று என்னவோ வியாபாரிமீது ஒரு வெறுப்பு ஏற்பட்டது, பதிலுக்குக் கும்பிடவில்லை. காரணம் தெரியாத வெறுப் புணர்ச்சி மனத்தில் அவரைப் பற்றி அருவருப்பு. சந்தனக்கட்டை வியாபாரியாகிய செட்டியாரையே நினைத்துக் கொண்டு மன்னன் சென்றான்.

மன்னனிடம் மறுநாள் ஒரு மகான் வந்தார். அவர் திரிகாலஞானி. மனத்தின் இருப்பதனையறியும் மகிமை வாய்ந்தவர். அவரை அரசன் அஞ்சலி செய்து, ஆசனத்தில் அமரச் செய்து, பாலும் தேனும் தந்து உபசரித்தான்.

''சுவாமி! ஒரு சிறு சந்தேகம், கடை வீதியில் ஒரு பிரபல சந்தனக்கட்டை வியாபாரி இருக்கிறார். அடியேன் அவ்வழியே போகும்பொழுது தினந்தோறும் அந்தச் செட்டியார் எழுந்து என்னைக் கைகூப்பித் தொழுவார். நானும் அவரை வணங்குவேன். நேற்று நான் போகும்போது அவர் என்னைத் தொழுதார். எனக்கு என்னவோ அவரிடம் காரணமில்லாமல் ஒரு வெறுப்பு ஏற்பட்டது. என் கை வணங்க மறுத்துவிட்டது. குருநாதா! இதன் காரணம் அறியாமல் மனம் தத்தளிக்கிறது. எல்லாம் தெரிந்த தாங்கள்தான் இதனை விளக்க வேண்டும்'' என்றான்.

சாதுமகான், ''வேந்தே! இந்த வினாவுக்கு விடை மூன்று நாட்களுக்குப் பின்பு கூறுவேன். இன்று நீர் போகும்போது உமது மனம் நினைக்கும் நிலைமையை நாளை என்னிடம் கூறும்'' என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாகித்திய விழா - விருது



மாண்புமிகு பிரதமர் டி. பி. விஜயதுங்க அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சாகித்திய விருதுகளை வழங்கினார். படத்தில் திரு ஆர். சிவகுரு நாதன் அவர்கள், ' இலக்கியச்செம்மல் ' பட்டமும், விருதும் பெறுகின்ற காட்சி.

## பிராந்திய மொழி மாநாடு




பிராந்திய மொழியியல் மாநாட்டில் கலந்துகொண்ட அறிஞர்கள் இராஜாங்க அமைச்சர் பி. வி. தேவராஜ் அவர்களுடன் காணப்படுகின்றனர். படத்தில் அமைச்சின் செயலாளர், திணைக்களப்பணிப்பாளர் உட்பட உயரதிகாரிகளும் காணப்படுகின்றனர்.

படங்கள் உதவி :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்குள்ள நூல்கள்

★ **ஸ்ரீ நாலாயிரத் திவ்விய பிரபந்தம் பாகம் I - II**

இந்நூலின் இரண்டு பாகங்கள் அடங்கிய தொகுதி. சென்னை லிட்டில் பிளவர் கம்பனி வெளியீடு.

விலை : ரூ 540/-

★ **சுவாமி விபுலாநந்தர்**

பெ. சு. மணி எழுதிய இந்நூலில் சுவாமி விபுலாநந்தரின் தமிழகத் தொடர்புகள், இராமகிருஷ்ண இயக்கத் தொடர்புகள் என்பன விளக்கப்பட்டுள்ளன.

விலை : ரூ 45/-

★ **Ancient thoughts for modern man**

சுவாமி விபுலாநந்தரின் ஆங்கிலக் கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு. இராமகிருஷ்ண மிஷன் வெளியீடுகளான "பிரபுத்த பாரத" "வேதாந்த கேசரி" ஆகியவற்றில் (1940 / 41ம் ஆண்டுகளில்) வெளிவந்தவை. சென்னை இராமகிருஷ்ண மிஷன் இதனை வெளியிட்டுள்ளது. சுவாமிகளின் ஆங்கிலக் கட்டுரைகள் தொகுப்பு நூலாக முதன் முதலாக வெளிவந்துள்ளது.

விலை : ரூ 55/-

★ **சித்தர் பாடல்கள்**

டாக்டர். ச. மெய்யப்பன் அவர்களால் தொகுக்கப்பட்டுள்ளது. பதினெட்டு சித்தர்களின் பாடல்களும் அடங்கியுள்ளன. சென்னை மணிவாசகர் பதிப்பக வெளியீடு

விலை : ரூ 66/-

★ **தமிழறிஞர் விபுலாநந்தர் - வாழ்வும் பணிகளும்**

இருபது பேரின் கட்டுரைகள் அடங்கிய நூற்தொகுப்பு. சுவாமி விபுலாநந்தரின் வாழ்வு, பணிகள் என்பன பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இந்து சமய கலாசாரத் திணைக்கள வெளியீடு.

விலை : ரூ 125/-

இவற்றுடன் சென்னை இராமகிருஷ்ண மிஷன் வெளியீடுகள், இந்து சமய கலாசாரத்திணைக்கள நூல்கள் என்பனவும் திணைக்கள கருமபீடத்தில் விற்பனைக்குள்ளன. காரியாலய நாட்களில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணி வரை இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

Kumaran Press, Colombo-12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org